பக்கங்கள்: 13

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2053 கார்த்திகை 15 வியாழக்கிழமை 01.12.2022 கதிர் 26

### இது ரகசியம் அல்ல!

நாளை, நாளை என்று தள்ளிப் போன 'பிள்ளையார் கல்யாணத்துக்கு' கடைசியில் நாள் குறித்தாகிவிட்டது. விக்கின விநாயகனின் திருமணம் விக்கினம் இன்றி நடந்தேறுமா என்பது தான் கேள்வி.

இதென்ன 'பிள்ளையா 2

# தமிழர் தரப்பில் பொறிமுறை; தீர்வைக் கையாள அவசியம்!

## வலியுறுத்துகின்றது ரெலோ அமைப்பு ஒன்றிணைந்து அமைக்கவும் அழைப்பு



கொழும்பு,டிசெம்பர் 01

சமஷ்டி முறைதான் எமது அரசியல் தீர்வு என்பதில் தமிழ்த் தேசியத் தரப்பினரிடம் தெளிவும் உறுதியும் உள்ளன. ஆனால் அதை அடையும் வழியும் பொறிமுறையும் எம்மிடம் இல்லை. அதை வகுப்பது மிக அவசியம். தென்னிலங்கை தலைவர்கள் அழைக்கும் போதெல்லாம் நாம் சென்று பேசுவதால் மாத்திரம் எமது அரசியல் தீர்வு சாத்தியமாகாது. இப்படியே பயணிப்பதால் அரசியல் இலட்சியங்களை நாங்கள் அடைய முடியாது. அதை அடைவதற்கான பொறிமுறையே எமது தீர்வை சாத்தியமாக்கும். 11



## 4 கூட்டமைப்பு எம்.பிக்கள் அமெ. தூதுவருடன் பேச்சு!

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நான்கு எம்.பிக்கள் நேற்று மாலை கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் தூதுவர் ஜூலி கே சங்கை சந்தித்து 11

## மாகாண சபைகளுக்குப் பதிலாக மாவட்ட அபிவிருத்திக் குழுக்களா?

### அப்படி ஜனாதிபதி கூறவே இல்லையாம்!

மாகாண சபைகளுக்குப் பதிலாக மாவட்ட அபிவிருத்திக் குழுக்களை ஸ்தாபிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தயாராகி வருகின்றார் என்று ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன. இந்தச் செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை.

- இவ்வாறு ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


அதில் மேலும் உள்ளதாவது:-

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்த பதில், அர்த்தத்தை சிதைக்கும் விதத்தில் பல ஊடகங்களில் செய்திகளாக வெளியாகியுள்ளன.

எனினும், 2023ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் மைத்திரிபால சிறிசேனவின் கருத்துக்கு நேற்றுமுன்தினம் பதிலளித்த 11

## மனித உரிமை மீறலில் ஈடுபடும் சீனா ராஜபக்ஷக்களின் நண்பன்

### சபையில் சாணக்கியன் காட்டம்



மனித உரிமை மீறலில் ஈடுபடும் சீனா எமது மக்களின் நண்பன் அல்ல. ராஜபக்ஷக்களின் நண்பன் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான 11

## செம்மணி யாழ் வரவேற்பு வளைவில் ஏழரை அடி கருங்கல் சிவலிங்கம்!



யாழ்ப்பாணம் செம்மணியில் யாழ் வரவேற்பு வளைவுக்கு பக்கத்தில் ஏழரை அடி உயரக் கருங்கல் சிவலிங்கம் நேற்று வைக்கப்பட்டது.

சிவ பூமி அறக்கட்டளை நிறுவனம் இந்த சிவலிங்கத்தை நிர்மாணித்து நிலை நிறுத்துகின்றது. 11

## யாழ். மேயரை நேற்று பிரி. தூதர் சந்தித்தார்



யாழ் மாநகர சபைக்கு நேற்று புதன்கிழமை மாலை 6.30 மணியளவில் விஜயம் செய்த இலங்கைக்கான பிரித்தானிய தூதுவர் சரா ஹுல்ரன் யாழ் 11

## யாழ். – சென்னை விமான சேவை 12 முதல் வாரத்தில் 4 சேவைகள்!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிச.01

யாழ்ப்பாணம்(பலாலி) - சென்னை இடையேயான விமான சேவை எதிர்வரும் 12 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மீண்டும் முதலாவது விமானம் அன்று காலை 10.15 மணிக்கு பலாலி விமான நிலையத்தில் வந்திறங்கும் எனக் கூறப்பட்டது. பிற்பகல் 1 மணிக்கு அது பயணிகளுடன் புறப்பட்டுச் செல்லும்.

வாரத்துக்கு நான்கு நாள்கள் இந்தச் சேவை நடைபெறும் என 11

## சர்வதேசத்தின் நீதி கோரி வவுனியாவில் கவனவீர்ப்பு



(கி.வசந்தரூபன்)

சர்வதேசத்தின் நீதி கோரி வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் 11

## நல்லாட்சிக் கால நாடகம் அம்பலம்

### விளாசுகின்றார் சரவணபவன்



யாழ்ப்பாணம்,டிசெ.01

நல்லாட்சி அரசின் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட புதிய அரசமைப்பு முயற்சியில் அப்போதைய ஜனாதிபதியான மைத்திரிபால சிறிசேனவும், அன்றைய 12

## இரு மகள்மாரையும் மகனையும் துஷ்பிரயோகம் செய்த தகப்பன்

ஹோமாகம, திபாங்கொட பிரதேசத்தில் உள்ள வீடு ஒன்றில் தனது இரண்டு மகள்மாரையும் ஒருமகனையும்பலவருடங்களாக பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியவர் எனக் கூறப்படும் தந்தை ஒருவரைத் தாங்கள் கைது செய்துள்ளனர் என மத்தேகொட பொலிஸார் தெரிவித்தனர்.

இவரின் மனைவி பத்து வருடங்களுக்கு முன்னர் பிள்ளைகளை விட்டுச் சென்றதால் 13 வயது மகன், 16 வயது இளைய மகள் மற்றும் 24 வயது மூத்த மகள் ஆகியோருடன் ஒரே வீட்டில் வசித்து வந்தனர். 12

## கிராம சேவகர் திடீர் மரணம்!

### வடமராட்சியில் சோகம்



யாழ்., வடமராட்சியில் கிராம உத்தியோகத்தர் ஒருவர் திடீரென உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை 12

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கல்யாணம்' பற்றிப் பேசுகிறேன் என்று அங்கலாய்க்கின்றீர்களா?

பலாலி சர்வதேச விமான சேவையைத்தான் அப்படிச் சொன்னேன். கடந்த ஏழு, எட்டு மாதங்களாக இந்தா தொடங்குகின்றது, அந்தா தொடங்குகின்றது என்று போக்குக் காட்டி, பாச்சா பண்ணி வந்தது அச்சேவை. கடைசியில் வரும் 12ஆம் திகதி அது ஆரம்பம் என்று சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் உறுதி செய்தன.

ஆனாலும் அதற்கிடையில் வந்து விட்டது ஆப்பு. எந்த வடிவத்தில் தெரியுமா? கொஞ்சம் விவரிப்பது நல்லது.

பலாலி-சென்னைவிமானசேவையை 12ஆம் திகதி ஆரம்பிப்பது தொடர்பில் ஓர் அறிவித்தல் நேற்று வெளியானது. அதைப் பார்த்த போதுதான் ஆரம்பத்திலேயே அந்தச் சேவைக்குச் சனி பிடித்து விட்டது என்பது புரிந்தது.

'பலாலி சர்வதேச விமான நிலையத்தை வடக்கு மாகாணச் சுற்றுலாப் பணியகத்தின் இரு உறுப்பினர்கள் சென்று பார்த்தார்கள். சென்னையில் இருந்து வரும் அலையன்ஸ் ஏயரின் முதல் விமான சேவையை 12ஆம் திகதி வரவேற்க எல்லா ஏற்பாடுகளும் பலாலியில் செய்யப்பட்டுள்ளன. வாரத்துக்கு நான்கு சேவைகள். - சுனில் திஸநாயக்க, வடக்கு மாகாண சுற்றுலாப் பணியகம்' - என்று அந்த அறிவித்தல் ஆங்கிலத்தில் இருந்தது.

அந்த அறிவித்தலை ஒன்றுக்கு, இரண்டு தடவை நோட்டம் விட்டேன். அப்போதுதான் பொறி தட்டியது.

இது தேசிய சுற்றுலாப் பணியகம் அல்ல, வடக்கு மாகாண சுற்றுலாப் பணியகம். அதற்குத் தலைவர் ஒரு சிங்களவர் என்பதை அவதானித்த போதுதான் ஒரு விடயம் நினைவுக்கு வந்தது. அண்மையில் தமக்கு அதிகாரம் இல்லாமல் வடக்கு மாகாண ஆளுநர் பிரகடனப்படுத்திய நியதி சட்டங்களில் ஒன்று - 'வடக்கு மாகாண சுற்றுலாப் பணியக நியதிச் சட்டம்'. அவரது அந்த நியதிச் சட்ட வர்த்தமானி அறிவித்தலை ஒரு நோட்டம் விட்டேன். அந்தச் சட்டத்தின் கீழ் (அதற்குச் சட்ட வலிமை இருக்கின்றதா என்பது கேள்விக்குறியே.) வடக்கு மாகாண சுற்றுலாப் பணியகத் தலைவராக வடக்கு ஆளுநரால் நியமிக்கப்பட்டவர்தான் இந்த சுனில் திஸநாயக்க என்பது தெரிந்தது. அது மாத்திரமல்ல, பணியகத்துக்கு மேலும் 4 உறுப்பினர்களை ஆளுநர் நியமித்திருக்க வேண்டும். அம்சடக்காக - எந்தப் பகிரங்க அறிவித்தலும் இன்றி - அது இரகசியமாக செய்யப்பட்டிருக்கின்றமையினால், அவர்களும் சிங்களவரோ தெரியவில்லை. தன்னுடைய பௌத்த - சிங்கள விசுவாசத்தைக் காட்ட அவர்களையும் அப்படித்தான் ஆளுநர் நியமித்திருப்பார்.

இந்த மாகாண சபை முறை வந்தது இலங்கை - இந்திய ஒப்பந்தப்படிதான். அந்த ஒப்பந்தத்தின் முன்னுரையை வடக்கு ஆளுநராக இருப்பவர் ஒரு தடவை வாசித்திருப்பது நல்லது. வடக்கும் - கிழக்கும் தமிழர் தாயகம். அங்கு அவர்கள் தமது மொழியில், தங்கள் விடயங்களைக் கொண்டு நடத்துவதற்குத்தான் இந்த மாகாண சபையே. அதன் ஆளுநர் கதிரையில் வந்து இருந்து கொண்டு, சிங்களப் பந்தம் பிடிப்பது பொருத்தமற்றது; அநீதியானது.

வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் சிங்களவர். சுகாதார சேவை மாகாண பணிப்பாளர் சிங்களவர். போதாக்குறைக்கு ஆளுநர் தமது சிங்களப் பந்தத்தை காட்டுவதற்கு, மேற்படி பணியகத் தலைவர் போன்ற பதவிகளுக்கும் சிங்களவர்களையே நியமிக்கின்றார். நல்லது. தகுதி வாய்ந்த தமிழர்கள் அவர் கண்ணில் படவேயில்லைப் போலும்.

சரி. இந்த வடக்கு மாகாண சுற்றுலாப் பணியகத் தலைவரை நியமித்த சுற்றுலாப் பணியக நியதிச்சட்டம் என்ன என்று ஒரு தடவை தட்டிப் பார்த்தேன்.

ஏற்கனவே 2013 முதல் 2018 வரை நிர்வாகத்தை நடத்திய - தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட - வடக்கு மாகாண சபை இதே பெயரில் ஒரு நியதிச் சட்டத்தை நிறைவேற்றி இருக்கின்றது என்றார் அவை தலைவர் சி.வீ. கே. சிவஞானம்.

ஆரம்பத்தில் சுற்றுலா அதிகார சபை (Tourist Authority) சட்டத்தைத்தான் நிறுவ மாகாண சபை முயன்றது. ஆனால் 'அதிகார சபையை' மத்திய அரசு மட்டுமே ஸ்தாபிக்க முடியும் என்று கொழும்பிலிருந்து வழிகாட்டல் வந்தமையால் சுற்றுலாப் பணியக (Tourist Bureau) நியதிச் சட்டமாக நிறைவேற்றப்பட்டது என்கின்றன மாகாண சபை வட்டாரங்கள்.

இப்போது தாமும் ஒரு நியதிச் சட்டத்தை அதே பெயரில் வர்த்தமானியில் அறிவித்து, அதன் கீழ் சுற்றுலாப் பணியகம் ஒன்றையும் நியமித்து, அதன் கட்டுப்பாட்டில் பலாலி விமான சேவை விடயங்களையும் கையாள முயல்கின்றார் ஆளுநர்.

ஆனால் அப்படி அவர் நியதிச் சட்டங்களைப் பிரகடனப்படுத்தியமை செல்லாது, அப்படிச் செய்ய அவருக்கு அதிகாரம் இல்லை என்பது பட்டவர்த்தனமாகி வருகின்றது. திங்கள், செவ்வாயில் ஆளுநரின் நடவடிக்கைக்கு எதிராக, அவைத் தலைவர் சி.வீ.கே சிவஞானத்தை மனுதாரராக கொண்டு தடையீட்டு எழுத்தாணை மனு ஒன்றை கொழும்பு மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தாக்கல் செய்கின்றார்.

வழக்கின் முதல் ஓரிரு தவணைக்குள்ளேயே அந்த நியதி சட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிராக - இடைக்காலத் தடை

(11ஆம் பக்கம் பார்க்க)




வேலைவாய்ப்புகள்
அச்சுவடிவில்
வெளிவரவுள்ள
'தமிழர் பொருண்மியம்'
சஞ்சிகையில் கீழ்வரும்
வேலைவாய்ப்புகள்
(Full time & Part time)
உள்ளன.

- சந்தைப்படுத்தும் உத்தியோகத்தர்கள் - Marketing Officers
- விளம்பரம் சேகரிப்பாளர்கள் - Advertisement Collectors
- பக்க வடிவமைப்பாளர்கள் - Page Designers
- பிரதேச விநியோகத்தர்கள் - Area Distributors

தொடர்புகளுக்கு:-
0777 277 009


# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 10 கண்டி வீதி ஆதன இல 182 என்ற இலக்கத்தைக் கொண்ட ஆதனம் ஆதனப்பதிவேட்டில் முத்தையா சிவநாதன் என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் கண்டி வீதி இல 182 ஐச் சேர்ந்த லெஸ்ரன் பொனிலஸ் என்பவர் பிரசித்த நொத்தாரிசு திருமதி ஜெயச்சித்திரா சிறீதரன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1004ஆம் இலக்க 15.06.2011 ஆம் திகதியிடப்பட்ட வெளிப்படுத்தல் உறுதி மூலம் குறித்த ஆதனம் தனக்கு உரித்தானது என வெளிப்படுத்தியுள்ளதுடன் 1982ம் ஆண்டிலிருந்து தனது ஆட்சியிலுள்ளது எனவும் வெளிப்படுத்தியுள்ளார்.

ஆதன விபரம்:- வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று சிவியாதெரு இறை கிராமசேவையாளர் பிரிவு 3/93 யாழ் மாநகரசபை எல்லைக்குட்பட்ட விளாத்தித்தோட்டம் நிலப்பரப்பு பூச்சியம் குளி பூச்சியம் எட்டு தசம் எட்டு எட்டு (08.88) வீடும் கிணறும் எல்லைகள்.

கிழக்கும் தெற்கும்:- ஒழுங்கை

வடக்கு:- கண்டி வீதி

மேற்கு:- ஜேக்கப்பினதும் பெண் பரமேஸ்வரியினதும் ஆதனம்.

இதடங்கலும் இதற்குச் சேர்ந்தவைகளும்.

தற்போது லெஸ்ரன் பொணிவஸ் இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பரித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு/முழுமையாகவோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது லெஸ்ரன் பொணிவஸ் என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் இவ்வாதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**முதல்வர்,**
**மாநகரசபை.**
**யாழ்ப்பாணம்.**

# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 06 பிளைச்சர் ஒழுங்கை 23/6 ஆம் ஆதன இலக்கத்தைக் கொண்ட ஆதனம் 'சொந்தக்காரர்' என்ற பெயரில் எமது பதிவேட்டில் காணப்படுகின்றது.

இதன் கீழ் அட்டவணையில் நன்கு விபரிக்கப்படும் ஆதனம் சொர்னசிதம்பரம் கைம்பெண் நேசரெத்தினம் 04.03.1970ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ஜோன் பற்றிக் முகதாவில் 3322ஆம் இலக்கத்தில் நிறைவேற்றிய நன்கொடை உறுதி மூலம் அந்தோனிப்பிள்ளை பெண் செல்வபாக்கியம் என்பவரிற்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.

பின்னர் குறித்த ஆதனத்தை அந்தோனிப்பிள்ளை கைம்பெண் செல்வபாக்கியம் 01.12.2002 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு அ.இராஜரட்ணம் முகதாவில் 874ஆம் இலக்கத்தில் நிறைவேறிய சீதன உறுதி மூலம் சீதனமாக சூரியகுமார் கிறிஸ்தோப்பர் பெண் ஐடா சசிரேகாவுக்கு சீதனமாக ஈகை செய்துள்ளனர். கிறிஸ்தோபர் பெண் ஐடா சசிரேகா அற்றோனிக்தத்துவக்காரரான இலக்கம் 16/6 புதிய வீதி மட்டக்களப்பு அரசகோன் சார்ள்ஸ் அரியரட்ணம் மூலம் குறித்த ஆதனத்தை 28.11.2020ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு நா.கோவர்த்தனன் முகதாவில் 60ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் டேவிட் றொபின்சனும் பெண் பவப்பிரியாவுக்கு கைமாற்றியுள்ளார்.

குறித்த 60ஆம் இலக்க உறுதியில் கணவர் கையொப்பமிடாமையினால் 01.02.2021 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு கோவர்த்தனன் முகதாவில் 71 ஆம் இலக்கத்தில் உறுதிப்படுத்தல் உறுதியினை நிறைவேற்றியுள்ளார்.- பின்னர் குறித்த ஆதனத்தை டேவிட் றொபின்சனும் பெண் பவப்பிரியாவும் 2ம் பகுதியராக இராசநாயகம் அன்ரன் ராஜ்குமாரும் 21.02.2021 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு நா.கோவர்த்தனன் முகதாவில் 77 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட பிரிவிடல் உறுதி மூலம் பிரிவிடல் செய்யப்பட்டது.

ஆதன அட்டவணை:-

வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி சுண்டுக்குளி கோவிற்பற்று, யாழ்ப்பாணம் பிரதேச செயலகம், யாழ்ப்பாண மாநகரசபை, கிராம அலுவலர் பிரிவு ஈச்சமோட்டை மூ/66 சுண்டுக்குளி இறை.

பிரம்படியிற்புலம் வயலும் பிரம்படியில் பள்ளம் வயலும் பிரம்படியில் பள்ளமும் நிலப்பரப்பு 1 குளி 16.51 ஆனால் இது உத்தரவுபெற்ற நில அளவையாளர். P.புஸ்பராஜா அவர்களால் 2002.12.17ஆம் திகதி 1156ஆம் இலக்கத்தில் தயாரிக்கப்பட்ட நில அளவைப்படத்தில் துண்டு 1,2 எனச் சுட்டப்பட்ட நிலப்பரப்பு 1 குளி 16.510 ஆனால் இது மீண்டும் இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் பு.அருள்நேசன் அவர்களால் 2020.11.24 ஆம் திகதி 3937A ஆம் இலக்கத்தில் தயாரிக்கப்பட்ட நில அளவைப்படத்தில் துண்டு 1,2 எனச்சுட்டப்பட்ட நிலப்பரப்பு 1 குளி 16.24 இதில் துண்டு 2 என சுட்டப்பட்ட நிலப்பரப்பு பூச்சியம் குளி பதினேழு தசம் ஒன்று இரண்டும் நில பர 0 குளி 17.12 உடைந்த வீடும் இதற்கெல்லை

கிழக்கு - ஞானபூரணம் அந்தோனிப்பிள்ளையின் ஆதனம்

வடக்கு - குறித்த படத்தில் துண்டு 1

மேற்கு - ஒழுங்கை

தெற்கு - துரைராஜா பெண் மலரின் ஆதனம் இதடங்கலும்

தற்போது பிரிவிடல் செய்யப்பட்டதின்படி டேவிட் றொபின்சனும் பெண் பவபிரியாவும் இவ்வாதனத்தை தமது பெயரிற்கு பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு/ முழுவதற்கும் உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது டேவிட் றொபின்சனும் பெண் பவபிரியாவும் என்னும் பெயரிற்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இவ்வாதனம் பெயர்மாற்றம். செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**முதல்வர்**
**மாநகரசபை**
**யாழ்ப்பாணம்.**

காலைக்கதிர் Kalaikkathir

# ஊடக நெறியாக்கத்துக்கு அமைவாக சமூக ஊடகங்கள் செயற்படுன்றனவா?

## கவனம் செலுத்த வேண்டும் என்கிறார் அமைச்சர் பந்துல

ஊடகங்கள் உயர் ஊடக கலாசாரத்தைப் பேணும் வகையில் செயற்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள் ளப்படும்.

ஊடகங்கள் மற்றும் ஊடக நிறுவனங்களின் சுதந் திரத்துக்கு எதிராகச் செயற்படப் போவதில்லை. சமூக ஊடகங்கள் தற்போது ஊடக நெறியாக்கத்திற்கமைய செயற்படுகின்றனவா என்பது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என ஊடகத்துறை அமைச்சர் பந் துல குணவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2023 ஆம் ஆண் டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் வெளிநாட்டலுவல் கள், போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான குழுநிலை விவாத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

ஊடகங்களின் சுதந்திரத்தையும், உரிமைகளையும் மறுக்கவில்லை. ஊடக சுதந்திரத்துக்கு எதிராக செயற் படும் போது தோற்றம் பெறும் விளைவுகளுக்கு வரலாற் றில் பல சம்பவங்கள் சான்றாக உள்ளன.

பல்வேறு காரணிகளால் நாட்டின் நற்பெயர் தொடர் பில் சர்வதேசத்தின் மத்தியில் தவறான சித்திரிப்புக்கள் காணப்படுகின்றன.

ஒருசில ஊடகங்கள் ஊடகவியலின் அடிப்படை நெறிமுறைகள் மற்றும் ஊடக ஒழுக்கவியலுக்கு எதிராக செயற்படுகின்றமையை மறுக்க முடியாது.

நாட்டின் முன்னேற்றத்தில் ஊடகங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. ஆகவே ஊடகங்கள் தாய் நாட்டுக்காக பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்பதை வலியுறுத்து கிறோம்.

சமூக ஊடகங்களைக் கண்காணிக்கும் வகையிலான சட்டத்தை இயற்ற அரசாங்கம் அவதானம் செலுத்தியுள் ளதாக குறிப்பிடப்படுகிறது. சமூக ஊடகங்கள் தற்போது ஊடக நெறியாக்கத்துக்கமைய செயற்படுகின்றனவா என்பது தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும்.

ஊடகங்கள் உயர் ஊடக கலாசாரத்தைப் பேணும் வகையில் செயற்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள் ளப்படும். ஊடகங்கள் மற்றும் ஊடக நிறுவனங்களின்




சுதந்திரத்துக்கு எதிராக செயற்படப் போவதில்லை. – என் றார்.

# சுகாதாரத்துறை ஆபத்துக்குள் தள்ளப்படும் நிலைமை உள்ளது!

## விஜித ஹேரத் எச்சரிக்கை



சுகாதாரத்துறைக்கு ஒதுக்கப்படும் நிதி குறைக்கப்பட்டுள்ள நிலையில், அடுத்த வருடத்தில் நாட்டின் சுகாதாரத்துறை பெரும் ஆபத்துக்குள் தள்ளப்படும் நிலைமை ஏற்படலாம் என தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் சுகாதார அமைச்சு மற்றும் புத்தசா சன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு விடயதா னங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் குழு நிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரி வித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

வீட்டுச் செலவில் 50 வீதத்தை மருந்துகளுக்காக செலவிட வேண்டியுள்ளது. ஆனால் அரசாங்கமோ மொத்த செலவில் 4 வீதமான நிதியையே சுகாதாரத் துறைக்காக ஒதுக்கியுள்ளது.

மொத்த தேசிய உற்பத்தியில் இது ஒரு வீதத்திலும் குறைவா கும். உலக முறைதான் மொத்த தேசிய உற்பத்தியில் சுகாதாரத் துக்கு 5 வீதமாவது ஒதுக்கப்படவேண்டும் என்பதாகும். இதன்படி குறைந்தளவான நிதியை சுகாதாரத் துறைக்காக ஒதுக்கும் நாடுகளில் ஒன்றாக இலங்கை மாறியுள்ளது.

சுகாதாரத் துறைக்கு ஒதுக்கும் நிதி வருடாந்தம் அதிகரிக்க வேண்டும். ஆனால் அரசாங்கம் குறைத்துக்கொண்டே போகின் றது. இதன்மூலம் அடுத்த வருடத்தில் நாட்டு மக்களின் சுகாதார நிலைமை பெரும் ஆபத்துக்குள் போகும் என்பதையே காட்டு கின்றது.

தற்போது பல்வேறு வைத்தியசாலைகளில் மருந்துகள் இன்றி நோயாளர்கள் இறக்கின்றனர். யாழ்ப்பாணம் வைத்தி யசாலையில் எஸ்பிரின் மருந்துகூட இல்லை.

இவ்வாறான நிலைமைக்கு சுகாதாரத்துறை தள்ளப்பட்டுள் ளது. ஆனால் சுகாதாரத்துறையில் கோடிக்கணக்கான மோசடி தொடர்பில் எந்த விசாரணையும் இடம்பெறுவதில்லை.

வைத்தியசாலைகளுக்கு நியமிக்கப்படும் பணிப்பாளர்கள் பாரியளவில் மோசடிகளில் ஈடுபட்டு வந்திருக்கின்றனர்.

அவ்வாறான அதிகாரிகளின் நியமனம், அவர்களின் மோசடி தொடர்பாக கணக்காய்வாளரின் அறிக்கையில் உறு திப்படுத்தப்பட்டுள்ளபோதும் எந்த நடவடிக்கையும் எடுக்கா மல் வைத்தியசாலை கட்டணங்கள் அதிகரிக்கப்படுகின்றன.

அத்துடன், மருத்துவ ஆராய்ச்சு தரவுகள் காணாமல் போனமை தொடர்பில் பாரியளவில் கடந்த காலங்களில் பேசப் பட்டு வந்தது. ஆனால் தற்போது அது தொடர்பில் எந்த நடவடிக் கையும் இல்லை. அந்த விசாரணைகள் மறைக்கப்பட்டுள் ளன.

எனவே உலக சுகாதார ஸ்தாபனம் வழங்கும் நிதியில் எமது நாட்டின் சுகாதார பிரச்சினைகளை தீர்க்க முடியாது. இதனால் அரசாங்கம் சுகாதார துறைக்கான நிதியை அதிகரிக்க நடவ டிக்கை எடுக்க வேண்டும். – என்றார்.


## 2023 ஆம் ஆண்டிற்கான தனியார் பாதுகாப்பு சேவையைப் பெற்றுக் கொள்வதற்கான பெறுகை அறிவித்தல் பருத்தித்துறை நகரசபை

**கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி** :- 2022.12.01 - 2022.12.15 வரை
மு.ப 9.30 தொடக்கம் பி.ப 3.00 மணி வரை

**கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி** :- 2022.12.16 பி.ப. 3.00 மணி வரை

**கேள்வி திறக்கும் திகதி** :- 2022.12.16 பி.ப. 3.00 மணி

**கேள்வி திறக்கும் இடம்** :- பருத்தித்துறை நகரசபை

1) பருத்தித்துறை நகரசபையின் உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழுத்தலைவரால் இலங்கை பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்த தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட சேவைகளுக்காகக் கோரப்படுகின்றன.

2) சேவை வழங்குநர்களின் தலைமைக்காரியாலயம் அல்லது கிளைக்காரியாலயம் யாழ் மாவட்டத்தில் அமைந் திருத்தல் வேண்டும்.

3) சேவை வழங்குநர்கள் குறித்த சேவையில் ஆகக்குறைந்தது 05 வருட அனுபவத்தினை பெற்றிருத்தல் வேண்டும்

4) மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப்படிவக் கட்டணமாக ரூபா 2,000.00 (VAT நீங்கலாக) இனைச் செலுத்துவதுடன் மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப்பணமாக ரூபா 5000.00 இனை பணமாக அலுவல கத்தில் செலுத்தி விண்ணப்பப் படிவத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

5) கேள்விப்பத்திர ஆவணங்கள் 2022.12.16 ஆந் திகதி பி.ப 3.00 மணிக்கு முன்பாக கிடைக்கக்கூடியவாறு **தவிசாளர், பருத்தித்துறை நகரசபை, கல்லூரி வீதி, பருத்தித்துறை** என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத் திற்கு முன் இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும்.

6) கேள்விப்பத்திரங்கள் அனைத்தும் **பெறுகை நேர முடிவில் உடனடியாகவே** திறக்கப்படும். அதில் கேள்வி தாரரோ அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்துகொள்ள அனும திக்கப்படுவர்.

7) கேள்விப்பத்திரம் உள்ளடங்கிய கடித உறையின் மேல்மூலையில் மூலப்பிரதி, இணைப்பிரதி எனக் குறிப்பிடப்படுவதுடன் கேள்வியின் பெயரும் குறிப்பிடப்படல் வேண்டும்.

8) கேள்வி பத்திரங்கள் தொடர்பான இறுதி முடிவு எடுக்கும் அதிகாரம் பெறுகைக்குழுத் தலைவருக்கே உரியதாகும்.

9) மேலதிக விபரங்களை அலுவலக கடமை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**தொலைபேசி இல;- 021 226 3213**

| இல | இல பாதுகாப்புச் சேவை தேவைப்படும் இடம் | தேவைப்படும் பாதுகாப்பு உத்தியோகத்தர் எண்ணிக்கை | | வேண்டப்படும் பாதுகாப்பு பிணை | |
|---|---|---|---|---|---|
| | | 04 | | பாதுகாப்புப் பிணை தொகை (மீளளிக்கக் கூடியது) | செல்லுபடியாகும் காலம் |
| | | பகல் | இரவு | | |
| | 1) பருத்தித்துறை நவீன சந்தைக் கடைத்தொகுதியும் மரக்கறி சந்தையும் | 01 | 01 | | |
| | 2) மூன்றாம் குறுக்கு தெருவில் உள்ள களஞ்சிய அறைக்கான இரவு காவல் கடமை (மாலை 6.00மணி முதல் அதிகாலை 6.00 மணி வரை) | | 01 | 5,000.00 | 60 நாள்கள் |
| | 3) தும்பளை கிழக்கு சிறுவர் பூங்காவிற்கான காவல் கடமை (காலை 9.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை) | 01 | | | |

30.11.2022

தலைவர்,
உள்ளூராட்சி மன்ற பெறுகைக் குழு,
பருத்தித்துறை நகரசபை.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சப்ரியின் சமாளிப்பு

**வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியின் உண்மை முகம் அவரது நேற்றைய நாடாளுமன்ற உரையில் அப்பட்டமாக வெளிப்பட்டிருக்கின்றது.**

**தனது சமூகத்துக்கும், நாட்டுக்கும், மக்களுக்கும் தாமும் சேர்ந்து எத்தகைய வரலாற்றுக் குற்றம் இழைத்தார்கள் என்பதற்கு நேற்று நாடாளுமன்றத்தில் ஒப்புதல் வாக்குமூலம் அளித்திருக்கின்றார் அவர்.**

**இந்தக் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை தாமே சுயமாக அளித்துவிட்டு, அந்தக் குற்றத்திற்கான பொறுப்பை வேறு யார், யாரோ மீது சுமத்தியவாறு, இந்தத் தேசியப் பட்டியல் எம்.பி. பதவியையும் அதன் மூலம் கிட்டிய அமைச்சர் பதவியையும், அவர் தொடர்ந்து வகிப்பது வெட்கக் கேடானதாகும்.**

**தான் பின்பற்றும் புனித இஸ்லாம் மதத்துக்கு நேர்மையாக நடப்பதற்காகவாவது அவர் தமது பதவியைத் துறந்து இருக்க வேண்டும்.**

**கொவிட் தொற்றால் மரணித்த முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்களை அவரவர்களின் மரபு, மார்க்கத்துக்கு மாறாகக் கட்டாயப்படுத்தி புதைக்கும் முடிவை எடுத்த கோட்டாபய ராஜபக்ஷவின் அரசில் நீதி அமைச்சராக இருந்தவர் அவர். ஜனாதிபதி கோட்டாபயவின் சட்ட ஆலோசகரும் அவரே.**

**அந்தக் கொடூரச் செயல் அரங்கேறிய காலத்திலேயே அது மிக மோசமான – தமது புனித இஸ்லாத்துக்கு எதிரான – குற்றம், தவறு என்பது அவருக்கு நன்கு தெரிந்திருந்தது. இப்போது வந்து அது தவறு என்று நாடாளுமன்றத்தில் ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கின்றார் – வெட்கமில்லாமல்.**

**அந்தக் கொடூரத்தை புரிந்த பாவமும் கூட சேர்ந்துதான் கோட்டாபயவை பதவியை விட்டுத் துண்டைக் காணோம், துணியைக் காணோம் என ஓட வைத்தது.**

**"இது தர்க்கம், அறிவியல் ஆகியவற்றுக்கு மாறான – பச்சாதாபமே இல்லாத – ஒரு முடிவு. அப்படி ஒரு முடிவு எடுக்கப்பட்டு இருக்கவே கூடாது" – என்று அச்சமயம் வாயை மூடிக்கொண்டு இருந்த இந்தப் புத்திஜீவி, இப்போது வந்து ஆற்றாமை – ஆதங்கம் – தெரிவிக்கின்றார்.**

**இது தொடர்பில் முட்டாள்தனமான – முரட்டுத்தனமான – முற்றிலும் பொய்யான – வழிகாட்டல் பரிந்துரையை வழங்கிய தரப்புகள் மீது இப்போது அவர் குற்றம் சுமத்துகிறார்.**

**உலக சுகாதார ஸ்தாபனம், உலகளாவிய மருத்துவ நிபுணர்கள் மற்றும் இலங்கை தவிர்ந்த முழு உலக நாடுகளுக்கும் இந்த உண்மை தெரிந்திருந்தும், அதற்கு மாறான முடிவை பௌத்த, சிங்கள பேரினவாதம் இனவெறி அடிப்படையில், படு போக்கிரித்தனமாக எடுத்த போது, அந்த அரசு தலைமையில் பங்காளியாக இருந்த அவர், இப்போது குற்றச்சாட்டுகளை வேறு தரப்புகள் மீது சுமத்தி, தான் தப்பப் பார்க்கின்றார்.**

**வடக்கு – கிழக்கில், தமிழர் தாயகத்தில், யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் பல்லாயிரம் தமிழர்கள் வல்வந்தமாக – வலிந்து – காணாமலாக்கப்பட்ட கொடூர விடயத்திலும் அவரும், அவரது முன்னைய அரசும், இப்போதைய அரசும் கூட, கொவிட் தொற்றில் மரணமடைந்தவர்கள் விடயத்தில் பண்ணிய அதே அட்டூழியத்தைத்தான் மேற்கொண்டு இருக்கிறார்கள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.**

**கொவிட் விடயத்தில் எப்படி தெரிந்து கொண்டும், நீதியை மிதித்து, அட்டூழியம் பண்ணினரோ, அதுதான் வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விடயத்திலும் இங்கு தொடர்கதையாக நீடிக்கின்றது. அதுதான் நமது துரதிஷ்டம்.**

## மருந்துக்காகக் கொடுத்த பணம் என்னவாயிற்று?

### பாட்டலி சம்பிக்க கேள்வி



உலக வங்கியும், ஆசிய அபிவிருத்தி வங்கியும் மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு வழங்கிய பணத்தை, அரச மருந்துகள் கூட்டுத்தாபனம் முறையாகப் பயன்படுத்தவில்லை என்பது கோப் குழுவில் தெளிவாகத் தெரியவந்துள்ளதாக எதிர்க்கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

நாடாளுமன்றில் கருத்து தெரிவிக்கும் போதே ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

நாட்டுக்கு கொண்டு வரப்படும் மருந்துகள் ஆரம்பத்தில் ஒழுங்குபடுத்தப்பட்ட போதிலும், மாதிரி பரிசோதனைகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாக ஒரு மருந்துக்கு அங்கீகாரம் வழங்கப்படுவதுடன், தரமற்ற மருந்து வகைகளை இறக்குமதி செய்யக்கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றன எனவும் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதன்மூலம் மருந்துக் கொள்வனவு, மோசடி கும்பலின் பிடியில் உள்ளதா என்ற சந்தேகம் எழுந்துள்ளதாகவும் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சின் செலவுத் தலைப்புகள் மீதான வரவு – செலவுத் திட்ட குழு விவாதத்தின் போதே பாட்டலி சம்பிக்க ரணவக்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

## 'மாவீரர் தின வியாபாரிகள்' என்ற தலைப்பில் சுவரொட்டி!

### மன்னாரில் காணப்பட்டன

மன்னார் மாவட்டத்தின் சில பகுதிகளில் 'மாவீரர் தின வியாபாரிகள்' என சில நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர் குறிப்பிடப்பட்டு ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டிகள் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளன.




குறிப்பாக 2009 ஆம் ஆண்டுக்கு பின்னர் ஒவ்வொரு மாவீரர் தினமும் வியாபாரமாக்கப்பட்டுள்ளதாகவும் மாவீரர்களை வைத்து வியாபாரம் இடம்பெறுவதாகவும் அதற்கு உதாரணமாக நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் மாவீரர் தினத்துக்கு என ஐரோப்பிய நாடுகளுக்கு சென்று பணம் வசூலிக்கிறார் என அந்தச் சுவரொட்டியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் லண்டன் தமிழர் ஒருங்கிணைப்பு குழு நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கு சில கோடி ரூபாக்களை அனுப்பி வைத்துள்ளதாக சுவரொட்டியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறித்த பணத்தில் சிறிது அளவு பணத்தை மாவீரர் தினத்திற்கு செலவழித்துவிட்டு மிகுதியை தங்கள் சொந்த செலவுகளுக்கு பயன்படுத்துகின்றனர் எனவும் இவ்வாறு மாவீரர் தினத்தை சுட்டிக் காட்டி ஒவ்வொரு முறையும் வியாபாரம் செய்வதாக அந்த சுவரொட்டியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாணவர்கள் தமது முதல் பட்டப்படிப்பை இலவசமாகப் பெறுவது பெரும் பாக்கியம்!

### கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இப்படிக் கருத்து



உலகின் பெரும்பாலான அபிவிருத்தியடைந்த நாடுகளில் பணம் செலுத்தி பல்கலைக்கழகக் கல்வியைப் பெற வேண்டும் என்றும் ஆனால் இலங்கை மாணவர்கள் தமது முதல் பட்டப்படிப்பை எமது நாட்டில் இலவசமாகப் பெறுவது பெரும் பாக்கியம் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

எனவே, கூடிய விரைவில் கல்வியை முடித்து சமூகத்தில் தமது பொறுப்பை நிறைவேற்றுவதே பல்கலைக்கழக மாணவர்களின் முதன்மையான நோக்கமாக இருக்க வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

உயர்கல்வி அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் பல்கலைக்கழக மாணவர்கள் குறிப்பிட்ட காலத்துக்குள் தங்கள் படிப்பை முடிக்காமல், 8 முதல் 10 ஆண்டுகளுக்கும் மேலாகப் பல்கலைக்கழகங்களில் தங்கியிருப்பதால், புதிய மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி வாய்ப்புகளை இழக்கின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பல்கலைக்கழகங்களில் நீண்டகாலம் தங்கியிருக்கும் மாணவர்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் பல்கலைக்கழகங்களும் உரிய தீர்மானங்களை எதிர்காலத்தில் எடுக்க வேண்டும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## 50 ஆயிரத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் 6 மாதங்களுக்குப் பின்னர் நாட்டுக்கு வருகை!

ஒரு மாதத்தில் இலங்கைக்கு வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 50 ஆயிரத்தைக் கடந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. அதற்கமைய இம்மாதம் முதலாம் திகதி முதல் 27ஆம் திகதி வரை 51 ஆயிரத்து 865 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

கடந்த வருடம் ஏப்ரலில் 62 ஆயிரத்து 980 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்ததன் பின்னர், இலங்கை 50 ஆயிரம் இலக்கைத் தாண்டியது இதுவே முதல் தடவையாகும் என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன் மூலம் சுற்றுலாத்துறையில் மீள் எழுச்சி காணப்படுவதாக அந்தச் சபை சுட்டிக் காட்டியுள்ளது.

# மனித உரிமைகள் விடயத்தில் அரசு நழுவிச் செல்லும் போக்குக்கூடாது!

## ஹக்கீம் வலியுறுத்து



சுதந்திர தினத்திற்கு முன்னர் தமிழ், முஸ்லிம் மக்களின் பிரச்சினைக்கு தீர்வுகாண நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி தெரிவித்திருக்கின்றார்.

அவரின் இந்த முயற்சியை நாங்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். அத்துடன் மனித உரிமை விடயத்தில் அரசாங்கம் நழுவிச்செல்லும் போக்கைக் கடைப்பிடிக்கக் கூடாது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சு, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு மற்றும் வெகுசன ஊடக அமைச்சு விடயதானங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் குழு நிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

வெளிநாட்டு தூதுவர் பதவி மிகவும் பொறுப்புவாய்ந்த சேவையாகும். கடந்த காலங்களில் சிறந்த அதிகாரிகள் இந்தப் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டிருந்தனர்.

அதனால் எமது நாடு தொடர்பில் அவர்கள் சிறந்த முறையில் செயற்பட்டு வந்தனர். ஆனால் தற்போது அரசியல் ரீதியில் தூதுவர்கள் மற்றும் அதிகாரிகள் நியமிக்கப்படுவதால் ஜெனிவாவில் எமது விடயங்களை முறையாகத் தெரிவிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக தற்காலத்தில் மனித கடத்தல்கள் தொடர்பில் வெளிநாட்டு அதிகாரிகள் முக்கிய கவனம் செலுத்தவேண்டும்.

அத்துடன் ஜெனிவா மனித உரிமை பேரவையில் இம்முறை எமக்கு அவமானத் தோல்வி. இந்த தோல்விக்கான காரணம் என்ன என்பதைப் பார்க்கவேண்டும்.

ஜெனிவா தீர்மானங்களுக்கு எவ்வாறு முகம்கொடுப்பது என்பது தொடர்பில் நாங்கள் ஆராய்ந்து பார்க்கவேண்டும். மாறாக, மனித உரிமை விடயத்தில் நழுவுவதற்கான முயற்சிகளை செய்யக்கூடாது. அரசாங்கம் தொடர்ந்து மனித உரிமை பேரவையின் தீர்மானங்களை அவமதிக்கும் வகையிலேயே செயற்பட்டு வந்திருக்கின்றது.

இனங்களுக்கிடையில் வெறுப்பூட்டும் பேச்சுக்களை பேசிவந்த நபரை ஒருநாடு - ஒருசட்டம் செயலணியின் தலைவராக அந்த அரசாங்கம் நியமித்தது. இந்த நடவடிக்கையை மேற்கொண்டபோது அப்போதைய நீதி அமைச்சர் தனது பதவியை இராஜினாமாச் செய்யவும் முயற்சித்தார்.

அதேபோன்று கொவிட் தொற்றில் மரணிப்பவர்களை எரிப்பதற்கு விஞ்ஞான ரீதியில் எந்த அடிப்படையும் இல்லாத நிலையில், அரசியல் ரீதியில் எடுத்த தீர்மானத்தின் அடிப்படையிலேயே சடலங்களை எரிக்கத் தீர்மானித்தனர். இதன் மூலம் முஸ்லிம் மக்களை நோவிப்பதே அரசாங்கத்தின் நோக்கமாக இருந்தது.

அத்துடன் ஜெனிவா மனித உரிமை பேரவையின் பந்தி 10 இல் இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. அதனால் கொவிட் தொற்றில் மரணித்தவர்களின் சடலங்களை எரிப்பதற்கு தீர்மானம் எடுத்தவர்கள் யார் என்பதைக் கண்டறிந்து, இதற்கு பின்னால் வேறு சக்திகள் இருக்கின்றனவா எனத் தேடிப்பார்க்க விசாரணை மேற்கொள்ளப்படவேண்டும். இந்தக் காரியத்துக்கு காரணமானவர்கள் தண்டிக்கப்படவேண்டும். அதனால் தான் இம் முறை ஜெனிவாவில் முஸ்லிம் நாடுகள் இலங்கைக்கு ஆதரவளிக்கவில்லை.

அத்துடன் அரசமைப்பின் ஊடாக இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணப்படவேண்டும் என்பதில் ஜனாதிபதி முயற்சி செய்து வருகின்றமையைக் காணமுடிகின்றது. அதனை நாங்கள் வரவேற்கின்றோம். எதிர்வரும் சுதந்திர தினத்துக்கு முன்னர் தமிழ், முஸ்லிம் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்திருக்கின்றார். அவரின் இந்த முயற்சியை நாங்கள் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். - என்றார்.

# அந்நிய செலாவணிச் சட்டத்தின் ஒழுங்கு விதிகளின் செல்லுபடியாகும் காலத்தை நீடிக்க அரசு தீர்மானம்!

அந்நிய செலாவணிச் சந்தையின் அடிப்படையில் ஏற்படக்கூடிய எதிர்மறை விளைவுகளைக் கருத்தில் கொண்டு ஒருசில மூலதனக் கொடுக்கல் வாங்கல்களுக்கு ஏற்புடையதாக வெளிநாட்டு செலாவணியை எமது நாட்டிலிருந்து வெளியே அனுப்புதலை நிறுத்துதல் மட்டுப்பாடுகளை விதிப்பதற்கு வெளிநாட்டு செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய அடிக்கடி ஒழுங்குவிதிகள் விதிக்கப்பட்டுள்ளன.

தற்போது வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளின் செல்லுபடியாகும் காலம் டிசெம்பர் 29 ஆம் திகதியுடன் முடிவடைகின்றது. அதனால், 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க அந்நிய செலாவணிச் சட்டத்தின் 22 ஆம் உறுப்புரையின் கீழ் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளின் செல்லுபடியாகும் காலத்தை டிசெம்பர் 30 ஆம் திகதியிலிருந்து மேலும் 6 மாதங்களுக்கு நீடிப்பதற்காகத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.



காலைக்கதிர்
Kalaikkathir

# மதத் தலைவர்களை அவமதிப்பதை நாங்கள் ஒருபோதும் அனுமதியோம்!

## பிரசன்ன ரணதுங்க திட்டவட்டம்



ஒருசில பௌத்த தேரர்கள் காலையில் காவி உடையை அணிந்துகொண்டு போராட்டங்களில் கலந்துகொள்கின்றனர். பின்னர் இரவு நேரங்களில் போராட்டக்காரர்களுடன் இணைந்து களியாட்டங்களில் ஈடுபடுவதை நாங்கள் முகப்புத்தகங்களில் காண்கின்றோம்.

பஞ்ச சீலத்தைப் பாதுகாத்துக்கொண்டு செயற்படும் எந்த தேரர்களையும் அகௌரவப்படுத்துவதை நாங்கள் அனுமதிக்கப்போவதில்லை என ஆளும் கட்சி பிரதமகொறடா அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விசேட கூற்றொன்றை முன்வைத்து குறிப்பிட்ட கருத்துக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவிக்கையில் –

சங்கசபை ஆயிரம் வருடங்களுக்கு முன்னரே அமைக்கப்பட்டது.

அன்று அரசர்களுக்கு ஆலோசனை வழங்கியது மகாநாயக்க தேரர்களாவர். பிக்குமார்களுடன் விளையாட்டுத்தனமாக செயற்படக்கூடாது என கூற்றொன்று இருக்கின்றது. ஆனால் இன்று ஆட்சியாளர்களின் ஆலோசனைகளைக் கேட்கவேண்டிய நிலையே மகாநாயக்க தேரர்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது.

அரசர் தெரிவிக்கும் அனைத்தையும் அனுமதிக்க வேண்டாம் என்றே புத்தபெருமான் உபதேசதித்திருக்கின்றார்.

ஆனால் ஆட்சியாளர்கள் தெரிவிப்பதுபோல் மகாநாயக்க தேரர்கள் இருக்கவேண்டும் என சில ஆட்சியாளர்கள் நினைத்துக்கொண்டிருக்கின்றார்கள்.

பிக்குமாரை அவமதிக்கும் வகையில் சொற்களைப் பிரயோகிப்பது பொருத்தமில்லை. கடந்த சில தினங்களுக்கு முன்னர் இந்த சபையில் தேரர்களை அவமதிக்கும் வகையில் பிரயோகித்த வார்த்தையால் ஒட்டுமொத்த தேரர்களும் விரக்தியடைந்திருக்கின்றார்கள். இவ்வாறு செயற்படவேண்டாம் – என்றார்.

இதற்கு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தொடர்ந்து பதிலளிக்கையில் –

மகாநாயக்க தேரர்களை அவமதிக்கும் வகையில் யாரும் கதைப்பதை நாங்கள் அனுமதிப்பதில்லை. கடந்த காலங்களில் காலை நேரங்களில் ஒரு சில தேரர்கள் காவியுடை அணிந்து போராட்டங்களில் ஈடுபட்ட பின்னர் இரவு நேரத்தில் போராட்டக்காரர்களுடன் களியாட்டங்களில் ஈடுபடுகின்றமையை நாங்கள் முகப்புத்தகங்களில் காண்கின்றோம். இதனால் தேரர்களுக்கு இருக்கும் கௌரவம் மக்கள் மத்தியில் இல்லாமல் போகின்றது.

மாறாக பஞ்ச சீலத்தைப் பாதுகாத்துக்கொண்டு செயற்படும் தேரர்களை அகௌரவமாக யாரும் கதைப்பதை நாங்கள் அனுமதிப்பதில்லை. அத்துடன் 1988 காலப்பகுதியில் ரணசிங்க பிரேமதாஸவின் காலத்தில் தேரர்களை காவியுடையில் சுற்றி கங்கைகளில் போட்ட சந்தர்ப்பங்களில் அதனைத்தடுப்பதற்கு இதுபோன்று உபதேசம் செய்ய அன்று யாரும் இருந்திருந்தால், நன்றாக இருந்திருக்கும். எந்த மதத்தலைவர்களையும் அகௌரவப்படுத்துவதை நாங்கள் அனுமதிப்பதில்லை. – என்றார்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## ஊமைகளாக்கும் வல்லூறுகள்



- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் - 197**

எனக்குத் தரப்பட்ட சில தகவல்களை இன்று பார்ப்போம் என நேற்றைய பதிவில் குறித்து இருந்தேன். அதற்குள் நுழைய முன், இன்று காணும் ஊடகத் தகவல்கள், தீர்வு பேச்சுக்களை பற்றிய ஜனாதிபதியின் அறிவிப்பு சுவாரஸியமாகவோ, தாமாகவோ இருப்பதாலும், அதைப்பற்றி பல ஆசிரிய தலையங்கங்கள், எழுவதாலும் அவற்றைப் பற்றி சிறிது குறித்து, நான் கோடிட்டவைக்குள் செல்லலாம் என நினைக்கிறேன்.

அதுதான், ரணில் அரசியல்வாதி, பேரினவாதத்தையும் பேராண்மையையும் தனது மூதாதையர் டி.எஸ்.சேனநாயக்க, டட்லி சேனநாயக்க. ஜே.ஆர். காலத்தில் இருந்து கட்டிக் காத்தவர், அவர் இந்திய ஒப்பந்தத்தை ஏற்கவில்லை, 13 ஆம் திருத்தச் சட்டத்தை ஆதரிக்கவும்



எம்.ஜி.ஆர்.

இல்லை என்பவை பற்றி முன் குறித்து இருந்தேன். ஆகவே அவரது வார்ப்பிலிருந்து வெளியேற முடியாதமை அவரது குண இயல்பு. தங்களது முழுமையான அதிகாரங்களில் பங்கு தருவது அவரால் முடியாதது.

நல்லாட்சிக் காலத்தில் பல நாள்கள், மாதங்கள், வருடங்கள் செலவழித்து உருவாக்கப்பட்ட அரசமைப்பு நகலை இதில் தன் பங்கு எதுவுமில்லை என மன்னன் துஷ்யந்தன் மாதிரி உதறித் தள்ளி விட்டுப் போனவர். அவர் தற்சமயம் வெளிப்படுத்தி இருக்கும் மாவட்ட சபைகளைப் பற்றி 'நதிகள் பின்னோக்கி ஓடுவதில்லை' என்ற தலைப்பில் இந்தப் பதிவில் சற்று விரிவாகக் குறிப்பிட்டிருந்தேன். தமிழீழத்துக்கு ஆணை தந்து விட்டு இருந்த தமிழ் மக்களுக்கு, மாவட்ட சபை அதிகாரங்களைத்தான் தரலாம், அதிலிருந்து மாவட்ட அபிவிருத்திகளை மேற்கொள்ளலாம் என்ற ஒற்றை ஆட்சியின் நீடிப்பையே ரணிலின் அரசியல் ஆசான் ஜே.ஆர். அறிமுகப்படுத்தினார். இணக்கமாக இதனைத் தமிழர் விடுதலைக் கூட்டணி ஏற்றது. அதற்கான தேர்தலையும் ஜே.ஆர். வைத்தார். நடந்த தேர்தலிலும் அதனை தட்டிப் பறிக்க எடுத்த முயற்சிகளையும் குறிப்பிட்டு இருந்தேன்.

ரணில் தந்திரமாக இரண்டு காய்களை திராணியற்ற தமிழ் தரப்புகள் இடையே அபிவிருத்தி என்ற போர்வையில் அவர்களை பிரிப்பதற்கு முன் வைத்து நகர்த்துகிறார். ஜே.ஆர். விடுதலைக் குழுக்களையும் விடுதலைக் கூட்டணியையும் மோதவிட்டமையும், கூட்டணியை தன்தரப்புக்கு ஒப்புதல் தர வைத்ததும் இது போலவே.

அந்தக் காயில் முதலாவதாக, தனது தேர்தலுக்கான அத்திவாரத்தை ரணில் அமைக்கிறார். அதில் அவர் ஐக்கிய தேசியக் கட்சியாக தனது கட்சி முன்னெடுத்த மாவட்ட சபைகளைத்தான் தர இணங்கினேன், ஆனால் சஜித், மஹிந்த போன்றோர் 13 ஆவது சட்ட திருத்தத்தை ஆதரித்தனர், ஆனால் அதை நான் விரும்பவில்லை என கோட்டாவின் தம்பியாக வாக்குச்சாவடியை திருப்திப்படுத்தலாம் - தீர்வு ஒன்றுமே நடக்காமல் எனத் தாம் தேர்தல் சமயத்தில் கூறலாம் என்று பார்க்கிறார்.

இரண்டாவது, மாவட்ட சபைகளினால் பரவலாக்கப்படும் அதிகாரங்கள் நான் முன்னர் குறிப்பிட்டபடி இன விகிதாசாரத்தின் பிரகாரம் பானைகளில் இருக்கும் சோற்றில் இருந்துதான் அமையும். இன்றைய இன விகிதாசாரத்தில் ஓரளவுக்கு யாழ்ப்பாண மாவட்டத்தை தவிர கணிசமான மற்றவை எல்லாம் அனேகமாக தமிழ் பெரும்பான்மையில் இருப்பது நிச்சயம் இல்லை.

ஜனநாயக ரீதியாக அதிகார பகிர்வுதான். ஆனால் அது யாருக்கு அந்த அதிகாரப் பகிர்வு? அவர்கள் கைகளிலேயே எல்லாம் இருக்கும். அவ்வளவுதான். எந்த அரசியல்வாதிகள் மார்த்தட்டினாலும் பெரும்பான்மை அங்கத்தினர்களால்தான் அவை இயங்கும்.

முன்னர் இணக்க பேச்சுக்களால் தமிழ் மக்கள் பெற்றுக் கொண்டதும் மாவட்ட சபைகள்தான். இதன்பின் இந்தியா தனது அழுத்தங்களால் தமிழ் மக்களுக்குப் பெற்றுக் கொண்டது இந்திய ஒப்பந்தத்தின் சரத்துக்கள். அதன் அமுலாக்கத்தைத் தமிழ் தரப்புகள் எதிர்க்க, இவற்றை வசதியாகப் பாவித்து ஜே.ஆர். அதற்குக் குழிப்பறித்தமையால் இந்த முப்பத்தைந்து வருடங்களில் பேராண்மை தனது திட்டங்களை முன்னெடுத்து, தமிழ் பிரதேசங்களை அபகரித்தது மட்டுமல்லாமல், இன விகிதாசாரங்களையும் மாற்றி அமைத்துள்ளது. ஆக இவற்றுக்கான பேச்சுவார்த்தைகள் இவர்களுடன் ஏதும் பலன் தருமா என்ற யதார்த்தம் மக்களிடையே உருவாக வேண்டும்.

இன விகிதாசாரத்தை சரி செய்யாத அதிகார பரவல் அர்த்தமுள்ளதாகாது.

***

**அப்பச்சி தேடலில்.....**

மேற்படி தலைப்பிலான வீடியோ பதிவு ஒன்றை அனுப்பிய நண்பர் அது தமிழ் மக்களின் தலைமைத்துவங்களுக்கும் பொருந்துகிறது, அந்த மக்களின் மனோபாவங்களையும் எடுத்துக்காட்டுகிறது, அவை மாறாத வரையில் அவர்கள் விடிவு காண்பது சிரமம் என்று சுட்டிக் காட்டினார்.



பட்டுக்கோட்டையார்

அதன் வீடியோவின் சாரம் தமிழ் மக்கள்புறக்கணிக்கப்படவேண்டியவர்களை போற்றிக் கொண்டும், யாரைப் போற்ற வேண்டுமோ அவர்களைப் புறக்கணித்தும் நடக்கிறார்கள் என்றும், கண்ணதாசனின் "யாரை எங்கே வைப்பது என்று யாருக்கும் புரியலே, அண்டங்காகத்துக்கும் குயில்களுக்கும் பேதம் புரியலே" என இப்பொழுது தலைமைத்துவத்தில் இருப்பவர்கள், எப்பொழுதோ யுத்த முடிவுடனாவது மக்களால் புறக்கணிக்கப்பட்டிருக்க வேண்டும், தங்களுக்கு வசதியாக அண்டங்காக்காக்களை குயிலென கூட்டி வந்து எல்லாம் தலைகீழாக மாறி இருக்கிறது என்பது அவர் கருத்து.

அந்தப் பேச்சில் ஒவ்வொரு சமூக இயல்புகளால் புறக்கணிக்கப்பட்டவர்கள் பற்றி இருந்தது.

எம்.ஜி.ஆர். தனது முதலமைச்சர் நாற்காலியின் நான்கு கால்களின் மூன்று கால்கள் யார் மூலம் வந்தது என்பதை அறியேன், ஆனால் ஒருகால் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் பாடல்களால் வந்தது என பெருமைப்படுத்தினாலும், வாழ்வில் பட்டுக்கோட்டை புறக்கணிக்கப்பட்டு, காதறுந்த செருப்புடன் நடந்து திரிந்தமையும், முண்டாசுக் கவிஞன் பாரதியைக் கண்டால் தமிழ் எழுத்துக்கள் எழுந்து நிற்கும், ஆனால் வாழ்க்கையின் புறக்கணிப்பினால் அவரடைந்த மன வேதனைகள், இந்தியாவின் குடியரசுச் சட்டத்தை உருவாக்கிய சட்ட மேதை அம்பேத்கார், முன்னைய தமிழ் நாட்டின் முதல் மந்திரிகள் கக்கன், காமராஜர் போன்றவர்களின் மக்களுக்கான அர்ப்பணிப்புகள், அவர்கள் அரசு வைத்தியசாலைகளில் மக்களோடு மக்களாக மருத்துவ உதவி பெற்றுக் கொண்டமையையும், தற்பொழுது தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடப்படும் தலைவர்கள் தும்மினாலோ ஜலதோஷம் என்றவுடன் அப்பல்லோ ஆஸ்பத்திரிகளில் படுத்து கொண்டு அங்கிருந்து மருத்துவ அறிக்கைகளை விடுவதை ஊடகங்கள் பெரிதுபடுத்தி பிரசிப்பதையும் அந்தப் பேச்சாளர் சுட்டிக்காட்டினார்.

தேர்தலுக்கு தேர்தல் வெற்றி பெற்று ஒவ்வொரு வெற்றிக்கும் பெற்ற வாகன 'பெர்மிட்டை' விற்றுக் காசாக்கி பல விதங்களிலும் சலுகைகள் பெற்றவர்கள், யுத்தத்தின் கடைசி நாள்களில் களத்தில் இல்லை, அனேகர் நாட்டிலேயே இல்லாமல் வெளியேறி, பின்னர் வந்து தமிழ் மக்களின் தலைவர்களாக வலம் வருகின்றமையை இந்த நண்பரால் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை. சட்ட மேதை அம்பேத்காரின் வாழ்வை உதாரணமாக காட்டி, சட்டங்களைத் தீட்டித் தீட்டி இந்தியாவின் குடியரசு சட்டத்தையே வரைந்தவரை, அவரது சமுதாயமே, அவர் தீண்டப்பட கூடாத குலத்தைச் சேர்ந்தவர் என்பதால் தீட்டுப்பட்டுவிடும் என்று வாழ்வு முழுவதுமே ஒதுக்கி புறக்கணித்து வைத்தமை போல் தமிழ் சமுதாயம் கூட அவர்களது விடுதலைக்காக உயிர்களைத் தந்து போராட முன்வந்த விடுதலைப் போராளிகளை போர் முடிவில் சமூகத்திற்குள் உள்வாங்கத் தயக்கம் காட்டுவதும், அரசியலில் பங்குபற்றத் தடைகள் தருவதும், போரின்போது ஓடி ஒளிந்து, பின்வந்து தங்களைப் போற்றிக் கொள்ளப்படுபவர்களாக மக்களுக்கு காட்டிக்கொண்டு, தமிழ் மக்களை முட்டாள்களாக ஆக்குவார்களின் முனைப்பில்தான் தங்களிடங்களை தக்க வைத்துக்கொள்ள இவற்றை நடத்துகிறார்கள் எனக் கோபமாகப் பேசினார்.

அவரது ஆத்திரங்களும் ஆதங்கங்களும் புரிந்தன. போரின்பின் தடுப்புக்களில் இருந்து வெளியாகி வந்த இளைஞர்கள், யுவதிகளின் இன்றைய நிலையையும், அவர்கள் மேலான சமுதாயத்தின் பார்வையையும் மறுப்பதற்கு முடியாது. இதற்கான நடைமுறைகள் தமிழ் மக்களின் எல்லாக் கட்டமைப்புகளில் இருந்தும் வர வேண்டும். சில சில முன்னெடுப்புகள் கட்சிகள் மூலமாக நடைபெறுவதான ஊடகச் செய்திகளைச் சுட்டிக்காட்டினேன். அவர் திருப்திப்பட்டவராகத் தெரியவில்லை.

போரின் பின்னால் கூட்டமைப்பினர் தாங்கள் ராஜதந்திரங்களில் சர்வதேசத்தோடு இணைந்து பயணித்து, தமிழ் மக்களுக்குத் தீர்வைப் பெற்றுக் கொள்வோம் என அறிவித்தமையால், விடுதலை புலிகளுடன் தொடர்ந்து அரவணைப்புகளையோ, அவர்களது இலட்சியங்களை முன்னெடுப்பது என வெளிப்படையாக தெரிவிப்பதையோ அவற்றுக்குக் குந்தகம் விளைவிக்கும் எனக் கூட்டமைப்பின் தலைவர்கள் அரசியல் சாணக்கியத்தில் சிந்திக்கலாம். விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் கூட புலம்பெயர் நகரங்களில் கடைசிக் காலப் போராட்டங்களில் விடுதலைப் புலிகளின் சின்னங்களை நீக்கி, மக்களைப் பாதுகாக்க கூடிய பதாகைகளை வைத்திருக்கவில்லையா எனக் கேள்விகள் எழுப்பினேன். ஆனால் ஆழ ஊடுருவிய உணர்வுகள் அவருடையவை. மறுதலிப்பாக எனது முன்னைய பதிவுகளில் இருந்தே விடயங்களைச் சுட்டிக் காட்டினார். அவற்றை நாளை பார்ப்போம்.

(வளரும்...)

காலைக்கதிர்
Kalaikkathir

# பாதுகாப்பு ஒத்துழைப்பு விவகாரங்களில் இந்தியா - பிரான்ஸ் நெருக்கம் அதிகரிப்பு

## இரண்டு நாடுகளும் உயர்மட்டங்களில் பல சுற்று விரிவான கலந்தாலோசனை

பிரான்ஸின் ஆயுதங்களுக்கான இயக்குநர் நாயகமும் மற்றும் சர்வதேச வளர்ச்சிக்கான இயக்குநருமான ஜெனரல் கேல் டயஸ் டி டுஸ்டா நேற்று இந்தியப் பாதுகாப்புப் படைத் தளபதி ஜெனரல் அனில் சௌஹானை சந்தித்துப் பேசினார்.

இந்த சந்திப்பின் போது, இருதரப்பும் தற்போதைய பாதுகாப்பு ஒத்துழைப்பு மற்றும் ஆத்மநிர்பர் பாரத் கொள்கையின் கீழ் மேலும் வாய்ப்புகள் குறித்து விவாதித்தனர்.

இந்த சந்திப்பு தொடர்பான விவரங்களை டுவிட்டரில்பகிர்ந்துகொண்டதலைமையகஒருங்கிணைந்த பாதுகாப்புப் பணியகம், பிரான்ஸ் இராணுவத்தின் சர்வதேச வளர்ச்சிக்கான இயக்குநர் ஜெனரல் கேல்







டயஸ் டி டுஸ்டா, பாதுகாப்புப் படைகளின் சிரேஷ்ட தலைவர் ஜெனரல் அனில் சௌஹானை இன்று (நேற்று) சந்தித்துப் பேசினார். தற்போதைய பாதுகாப்பு ஒத்துழைப்பு மற்றும் ஆத்மநிர்பர் பாரத் கீழ் மேலும் வாய்ப்புகளை ஆராய்ந்தனர் என்று தெரிவித்தார்.

கடந்த வாரம் பிரான்ஸ் நாட்டு இராணுவ அமைச்சர் செபாஸ்டின் லெகோர்னு இந்தியா வந்திருந்தார். அவரது பயணத்தின் போது, அவர் நவம்பர் 28 அன்று பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங்குடன் இந்திய - பிரான்ஸ் வருடாந்திர பாதுகாப்பு உரையாடலை நடத்தினார்.

புதுடில்லியில் வருடாந்திர பாதுகாப்பு உரையாடலின் போது, சிங் மற்றும் லெகோர்னு பல்வேறு இருதரப்பு, பிராந்திய மற்றும் பாதுகாப்பு தொழில்துறை ஒத்துழைப்பு பிரச்சினைகள் குறித்து விவாதித்தனர்.

பின்னர் ராஜ்நாத் சிங் ஒரு டுவீட்டில், இன்று புதுடில்லியில் நான்காவது இந்தியா - பிரான்ஸ் வருடாந்திர பாதுகாப்பு உரையாடலின் போது பிரான்ஸ் பாதுகாப்பு அமைச்சர் செபாஸ்டின் லெகோர்னுவுடன் நெருக்கமான மற்றும் பயனுள்ள கலந்துரையாடல்களை மேற்கொண்டேன். இருதரப்பு, பிராந்திய மற்றும் பாதுகாப்பு தொழில்துறை ஒத்துழைப்பு தொடர்பான பல்வேறு பிரச்சினைகள் இருந்தன. உரையாடலின் போது அவை பற்றி விவாதிக்கப்பட்டது." என்று தெரிவித்தார்.



இந்த சந்திப்பின் போது, இருதரப்பு, பிராந்திய, பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு தொழில்துறை ஒத்துழைப்பு விவகாரங்கள் குறித்து இரு தலைவர்களும் விவாதித்தனர் என பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிங் மற்றும் லெகோர்னு ஆகியோர் பாதுகாப்பு ஒத்துழைப்பை மதிப்பாய்வு செய்தனர். அத்தோடு கடல்சார் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான வழிகள் குறித்தும் விவாதித்தனர்.



ராஜ்நாத் சிங் மற்றும் செபாஸ்டின் லெகோர்னு ஆகியோர் சமீபத்திய ஆண்டுகளில் கணிசமாக அதிகரித்துள்ள இராணுவத்துக்கும் இராணுவத்துக்கும் இடையிலான ஒத்துழைப்பை மதிப்பாய்வு செய்தனர். கடல்சார் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது மற்றும் இருதரப்பு பயிற்சிகளின் இலக்கு மற்றும் சிக்கலான தன்மையை அதிகரிப்பது குறித்து அவர்கள் விவாதித்தனர். ஜோத்பூரில் இந்தியாவும் பிரான்ஸும் தங்களது இருதரப்பு விமானப் பயிற்சியான 'கருடா'வை வெற்றிகரமாக நடத்தியமையை அவர்கள் திருப்தியுடன் குறிப்பிட்டனர்.

உரையாடலின் போது, ராஜ்நாத் சிங் மற்றும் செபாஸ்டின் லெகோர்னு ஆகியோர், 'மேக் இன் இந்தியா' மீது கவனம் செலுத்தி, பாதுகாப்பு தொழில்துறை ஒத்துழைப்பு குறித்து விவாதித்தனர். இரு தலைவர்களும் எதிர்கால ஒத்துழைப்பு மற்றும் சாத்தியமான இணை உற்பத்தி வாய்ப்புகள் குறித்தும் பேசினர். சிங் மற்றும் லெகோர்னு ஆகியோர் அடுத்த ஆண்டு தொடக்கத்தில் தொழில்நுட்ப குழுக்கள் கூடி முக்கிய ஒத்துழைப்பு பிரச்சினைகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்றும் ஒப்புக்கொண்டனர்.

வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கரும், பிரான்ஸ் இராணுவ அமைச்சர் செபாஸ்டின் லெகோர்னுவை சந்தித்து பேசினார். இரு தலைவர்களும் சமகால மூலோபாய முன்னேற்றங்கள் குறித்து விவாதித்தனர்.

எஸ்.ஜெய்சங்கர் தமதி டுவீட்டில் இன்று மாலை வெளிவிவகார அமைச்சுக்கு பிரெஞ்சு ஆயுதப் படை அமைச்சர் லெகோர்னுவை வரவேற்கிறேன். சமகால மூலோபாய வளர்ச்சிகள் பற்றிய ஒரு பரந்த விவாதம்(செய்வோம்)" எனக் குறிப்பிட்டார்.

திங்களன்று, லெகோர்னு இந்தியத் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவலையும் சந்தித்துப் பேசினார். இந்தியாவுக்கான பிரான்ஸ் தூதர் இம்மானுவேல் லெனைன் டுவீட் ஒன்றில், டோவல் மற்றும் லெகோர்னு முக்கிய உலகளாவிய மற்றும் பிராந்திய பாதுகாப்பு பிரச்சினைகள் குறித்து நெருக்கமான மதிப்பீடுகளைப் பகிர்ந்து கொண்டனர் எனவும், பயங்கரவாத எதிர்ப்பு ஒத்துழைப்பை தீவிரப்படுத்த ஒப்புக் கொண்டனர் எனவும் கூறினார்.

(மூலம்:ஏ.என்.ஐ.)

காலைக்கதிர் Kalaikkathir

# நாட்டின் அனைத்து இன மக்களையும் ஒன்றிணைக்கும் கொள்கை வகுக்கப்பட்டால் சர்வதேசம் அங்கீகரிக்கும்!

## நிரோஷன் பெரேரா இப்படி ஆலோசனை



கோட்டாபய ராஜபக்ஷவின் வெற்றிக்கு இனவாதம், மதவாதம் பிரதான அம்சமாக அமைந்தது. வாக்கு வங்கியைத் தக்க வைத்துக்கொள்ள பிற சமூகத்தின் மீது முன்வைத்த குற்றச்சாட்டுக்கள் இன்று சர்வதேச அரங்கில் மலினப்படுத்தப்பட்டுள்ளன.

ஆளும் தரப்பின் இனவாதம், மதவாதத்தை நாட்டு மக்கள் அடித்து விரட்டியுள்ளார்கள். அனைத்து இன மக்களையும் ஒன்றிணைக்கும் கொள்கை வகுக்கப்பட்டால் சர்வதேசம் இலங்கையை முழுமையாக அங்கீகரிக்கும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நிரோஷன் பெரேரா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் வெளிநாட்டலுவல்கள், போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான குழுநிலை விவாத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

சுதந்திரத்தின் பின்னரான காலப்பகுதியில் என்றுமில்லாத வகையில் இலங்கை தற்போது சர்வதேச மட்டத்தில் மிக மோசமான நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாண யுத்தக் குற்றச்சாட்டுகளுக்கு மத்தியில் தற்போது பொருளாதாரக் குற்றச்சாட்டும் சர்வதேச அரங்கில் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஜெனிவாவில் கடந்த செப்ரெம்பர் மாதம் இடம்பெற்ற 57 ஆவது கூட்டத்தொடரின் போது 7 நாடுகள் மாத்திரம் தான் இலங்கைக்கு ஆதரவாக வாக்களித்தன.

சர்வதேச அரங்கில் இலங்கைக்கு சார்பாகச் செயற்பட்ட ஆசியாவின் இஸ்லாமிய நாடுகள் இம்முறை இலங்கைக்கு ஆதரவாக செயற்படவில்லை, பெரும்பாலான நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்வதைத் தவிர்த்துக் கொண்டன.

ஆளும் தரப்பு தேர்தலில் வெற்றிபெற சமூகத்தின் மத்தியில் குறிப்பிட்ட வைத்தியர் சாபி விவகாரம், மலட்டுத் தன்மையை ஏற்படுத்தும் வகையிலான கொத்து என குறிப்பிடப்பட்ட முட்டாள்தனமாக விடயங்கள் இன்று சர்வதேச மட்டத்தில் மலினப்படுத்தப்பட்டுள்ளன.

கொவிட் தாக்கத்தால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த முஸ்லிம் சமூகத்தினரது உடல்களை தகனம் செய்வதில் அரசாங்கம் அவதானம் செலுத்தியது.

தமது வாக்கு வங்கியைப் பாதுகாத்துக் கொள்வதற்கு அரசாங்கம் ஆட்சி செலுத்தியது. இனவாதத்தின் ஊடாக அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ள அரசாங்கம் சமூகத்தின் மத்தியில் அருவருக்கத்தக்க பேச்சுக்களை பிரயோகித்தது, இறுதியில் முழு நாடும் பொருளாதாரப் பாதிப்பை எதிர் கொண்டு, நாட்டு தலைவர் நாட்டை விட்டு வெளியேறும் நிலை ஏற்பட்டது.

பொதுஜன பெரமுனவின் பலவீனமான அரசியல் தலைவர் நாட்டை விட்டு வெளியேறி சர்வதேசத்தின் ஆதரவைக் கூட பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது.

பொதுஜன பெரமுனவின் இனவாதம் மற்றும் மதவாத அரசியலை நாட்டு மக்கள் முழுமையாக இல்லாதொழித்துள்ளார்கள். ஆளும் தரப்பினரால் கடுமையாக விமர்சிக்கப்பட்ட மிஸ்டர் கிளீன் தற்போது ஆளும் தரப்பினரைப் பாதுகாக்க வந்துள்ளார்.

வெளிவிவகாரக் கொள்கை மறுசீரமைக்கும் போது நாட்டில் இனவாதம் மற்றும் மதவாதம் இல்லாத அரசியல் கொள்கை நடைமுறைப்படுத்தப்படவேண்டும். இனவாதம் இல்லாத கொள்கையை செயற்படுத்தினால் சர்வதேசம் இலங்கையை முழுமையாக அங்கீகரிக்கும். – என்றார்.

# ஊடகங்களை அச்சுறுத்தி தீர்வுகளை காண முடியாது!

## டிலான் பெரேரா சுட்டிக்காட்டு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்திய ஜனாதிபதிக்கு ஒப்பானவர். ஆகவே நிலையறிந்து அதற்கேற்ப செயற்பட வேண்டும். ஹிட்லர் போல் செயற்படுபவராகக் குறிப்பிட்டு ஊடகங்களுக்கு மறைமுக அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

ஊடகத்தை அச்சுறுத்தி எந்த நெருக்கடிக்கும் தீர்வு காண முடியாது என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் வெளிநாட்டலுவல்கள், போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கை காலம் காலமாக திருத்தம் செய்யப்பட்ட நிலையில் உள்ளது. பிளவுபடாத மற்றும் நடுநிலையான வெளிவிவகாரக் கொள்கையின் தன்மை முழுமையாக பேணப்படுகிறதா என்பது தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஆட்சிக் காலத்தில் வெளிவிவகாரத்துறை அமைச்சராகப் பதவி வகித்த லக்ஷ்மன் கதிர்காமர் வெளிவிவகாரக் கொள்கையை மறுசீரமைத்தார். அந்தக் காலக்கட்டத்தில் இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கையை உலகம் அங்கீகரித்தது.

முன்னாள் வெளிவிவகாரத்துறை அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் வெளிவிவகாரத்துறையில் நவீன காலத்துக்கு பொருத்தமான மூன்று சட்டத்திருத்தங்களை மேற்கொண்டார்.அரசியல் மாற்றங்கள் வெளிவிவகார கொள்கையில் தாக்கம் செலுத்தக் கூடாது.

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் வெளிவிவகார கொள்கை மறுசீரமைக்கப்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். வெளிவிவகாரக் கொள்கை அடிக்கடி மாற்றமடையும் போது கொள்கைகளின் உறுதிப்பாடு நிலையற்றதாகும் என்பதையும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்திய ஜனாதிபதிக்கு ஒப்பானவர். இந்திய ஜனாதிபதி மக்களால் தெரிவு செய்யப்படு பவர் அல்லர், நாடாளுமன்றத்தின் ஊடாகவே தெரிவு செய்யப்படுவார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்களால் தெரிவு செய்யப்பட்டவர் அல்லர், நாடாளுமன்ற உறுப்பினர்களால் தெரிவு செய்யப்பட்டவர்.

மக்களால் தெரிவு செய்யப்படாத ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்களால் தெரிவு செய்யப்பட்டவரை போன்று நினைத்துக்கொண்டு ஹிட்லரை போன்று செயற்படுகிறார் எனக் குறிப்பிடுகிறார்.ஹிட்லரை போன்று செயற்படுவதாகக் குறிப்பிட்டுக் கொண்டு ஊடகங்களுக்கு மறைமுக அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. ஊடகங்களுக்கு அச்சுறுத்தல் விடுத்து எந்த நெருக்கடிக்கும் தீர்வு காண முடியாது என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். – என்றார்.

# உள்நாட்டில் பயிற்சிகளைப் பெற்று வெளிநாடு செல்லும் வைத்தியர்கள், பொறியியலாளர்கள் தொடர்பில் நடவடிக்கை!

## ஜனாதிபதி ரணில் அதிரடி



நாட்டின் பெருமளவு நிதி செலவில் கற்கை நடவடிக்கைகள் மற்றும் பயிற்சிகளை மேற்கொண்டு நாட்டுக்கு சேவை வழங்காது வெளிநாடுகளுக்கு செல்லும் டாக்டர்கள் மற்றும் பொறியியலாளர்கள் தொடர்பில் நாடாளுமன்றத்தின் ஊடாக நடவடிக்கை எடுக் கப்பட வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மருத்துவ கற்கை மற்றும் பயிற்சிகளுக்காக ஒரு மாணவனுக்கு அரசாங்கம் 60 லட்சம் ரூபாவுக்கு அதிகமான நிதியை செலவிடுவதாக சபையில் குறிப்பிட்ட ஜனாதிபதி, அவர்கள் வெளிநாடுகளுக்கு வழங்கும் சேவை அந்த நாடுகள் இலங்கைக்கு வழங்கும் நிதி உதவியை விட அதிகமானது என்றும் அவர் தெரிவித்தார்.நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத்திட்டத்தில் சுகாதார அமைச்சு மற்றும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு விடயதானங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் குழு நிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

மருத்துவத் துறையை முன்னேற்றுவதற்கு நாட்டில் மேலும் மூன்று மருத்துவ பீடங்களை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். ஊவா வெல்லஸ்ஸ, குருநாகல் மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களில் அதனை நிறுவுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மருத்துவத்துறையில் பட்டப்பின் படிப்பு செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக தற்போது கொழும்பு பல்கலைக்கழகத்தில் அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதுடன் மேலும் இரண்டு பல்கலைக்கழகங்களில் அதற்கானசெயற்பாடுகளை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன்,கொழும்பிலுள்ள மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தை மேலும் பலப்படுத்தும் வகையில் அதன் செயற்பாடுகள் விஸ்தரிக்கப்பட வேண்டும்.

இந்தியாவில் பூனாவில் உள்ள இத்தகைய மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்துக்கு சமனானதாக இலங்கையில் அதனை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கான நிதி உதவிகளை பெற்றுக் கொடுப்பதற்கு வெளிநாடுகள் உதவ வேண்டும்.

அதேவேளை மருத்துவத் துறையில் வைத்திய பயிற்சிகளை மேற்கொள்ளும் மாணவர் ஒருவருக்கு அரசாங்கம் 60 லட்சம் ரூபா வரை செலவிடுகிறது.

நாட்டுக்காக அவர்களது சேவையை பெற்றுக் கொள்ளும் நோக்கிலேயே இந்தளவு தொகை செலவிடப்படுகிறது.

ஆனாலும் அனைத்து பயிற்சிகளையும் தாய்நாட்டில் பெற்றுக் கொண்டு அவர்கள் வெளிநாடுகளுக்கு சென்று அவர்களது சேவைகளை வழங்குகின்றனர். இந்தப் பிரச்சினையை நிவர்த்தி செய்யும் வகையில் நாடாளுமன்றத்தின் ஊடாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

எமது நாட்டு வைத்தியர்கள் மற்றும் பொறியியலாளர்கள் நாட்டின் பெரும் நிதி செலவில் பயிற்சிகளை பெற்றுக் கொண்டு வெளிநாடுகளில் சேவைகளை மேற்கொள்ளும் நிலையில் அந்த சேவைகள் அந்த நாடுகள் இலங்கைக்கு வழங்கும் நன்கொடையை விட அதிகமாகும் – என்றார்.

## இனி இது .....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

அறிவிக்கப்படும் - வாய்ப்புகள் தாராளமாக உண்டு என்று நம்புகின்றன சட்ட வட்டாரங்கள்.

அப்படி நடந்தால் மேற்படி வடக்கு மாகாண சுற்றுலாப் பணியகம் செயலிழக்கும். அதன் தலைவரும் பிற அங்கத்தினர் நால்வரும் கூட செயல்பட முடியாது.

அவர்களினால் இங்கு கையாளப்படும் பலாலி - சென்னை விமான சேவை என்னவாகும்? ஆண்டவனுக்கு தான் வெளிச்சம்.

***

முதலில் ஒரு கடுகுக் கதை.

காது கேளாத இருவர் வழியில் எதிர்ப்பட்டனர். அவர்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டனர்.

"எங்கே குளிக்கவா போகின்றீர்கள்?" - என்றார் முதலாமவர்.

"இல்லை, இல்லை, நான் குளிக்கப் போகிறேன்" என்றார் மற்றவர்.

அதை முழுமையாகச் செவிமடுத்தவர் போல "நான் நினைத்தேன் நீங்கள் குளிக்கப் போகின்றீர்களாக்கும்" எனப் பதில் அளித்தார் முதலாமவர்.

இப்படித்தான் நேற்று நாடாளுமன்றத்துக்குள் பேசிக் கொண்டிருக்கிறார்கள் போலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும்.

மைத்திரிபால சிறிசேன முன்னர் 1981 இல் நடைமுறைக்கு வந்த மாவட்ட அபிவிருத்திச் சபை (District Development Council) பற்றிப் பேச, அதை நாடாளுமன்றத்தில் தமது அறையில் இருந்து செவிமடுத்துக் கொண்டிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தற்போது நடைமுறையில் இருக்கும் மாவட்ட அபிவிருத்திக் குழுவை (District Development Committee) அவர் பிரஸ்தாபிக்கின்றார் என்று நினைத்துக் கொண்டு, விழுந்தடித்து நாடாளுமன்றுக்கு - சபைக்கு - விரைந்து வந்து, மைத்திரியின் அறிவிப்பைத் தாமும் வரவேற்கின்றார் என அறிவித்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

இந்தக் குழப்பம்தான் மாகாண சபைக்குப் பதிலாக மாவட்ட அபிவிருத்திச் சபையை ரணில் பிரேரித்திருக்கின்றார் என்ற சிக்கலாக நேற்று உருவெடுத்து பெரும் செய்திகளை ஏற்படுத்தி நின்றது.

- **மின்னல்** -

## தமிழர் தரப்பில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரெலோவின் ஊடகப் பேச்சாளர் சுரேந்திரன் விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

நிரந்தரமான அரசியல் தீர்வுக்காக தமிழர்கள் பல காலமாக வெவ்வேறு வழிகளில் போராடி வருகிறோம். மாறி வரும் அரசாங்கங்களோடு பேச்சுவார்த்தை நடத்தி வந்திருக்கிறோம். அதன் பின் ஏற்படுகின்ற அரசியல் குழப்பங்கள் காரணமாக பேச்சுவார்த்தைகள் பயனளிப்பதில்லை. அல்லது இறுதிக் கட்டத்தில் குழம்பி விடுகின்றன. இதற்கு காரணமாக அரசியல் மாற்றங்களை அமைந்திருக்கின்றன. பிராந்திய அரசியலில் ஏற்படும் மாற்றங்கள், உள்ளக அரசியலில் - குறிப்பாக தென்னிலங்கையில் - ஏற்படும் மாற்றங்கள் அதே போன்று தமிழர் தரப்பில் ஏற்படுகின்ற மாற்றங்கள் என்று வகைப்படுத்தலாம்.

சந்திரிகா அம்மையார் ஆட்சியில் கொண்டுவரப்பட்ட அரசியல் தீர்வு இறுதியில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களின் காரணமாக நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதோடு முடிவுக்கு வந்தது. அதன் தொடர்ச்சியாக ரணில் விக்கிரமசிங்க அவர்கள் விடுதலைப் புலிகளுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டன. முக்கியமாக சர்வதேச நாடுகள் இதற்கு ஆதரவை வழங்கியிருந்தன.

அதன் பின்னர் தமிழ் அரசியலில் பேரம் பேசும் சக்தி மௌனிக்கப் பட்டு ஏற்பட்ட மாற்றங்களினால் இந்த முயற்சியை தொடர முடியவில்லை.

நல்லாட்சி அரசாங்கத்தில் அரசியல் யாப்பு மாற்றத்தையே தோற்றுவித்து இறுதிச்சுற்று வரை சென்ற அரசியல் தீர்வு விடயம் பின்னர் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களினால் முடிவுக்கு வராமல் போனது.

தற்போது தமிழ் தரப்பில் ஏற்பட்டிருக்கின்ற அரசியல் பிரதிநிதித்துவ மாற்றங்கள் எமது பேரம் பேசும் பலத்தை வெகுவாகப் பாதித்திருக்கிறது. தெற்கில் ஏற்பட்ட அரசியல் மாற்றமும் தீர்வுக்கான தெளிவான பாதையை திறக்கவில்லை. அதனை வலியுறுத்த எமது பலமும் போதாமல் இருந்தது.

இன்று ஏற்பட்டிருக்கும் அரசியல் சூழ்நிலை எமது அரசியல் தீர்வுக்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்தி வருவதாக தோற்றம் தருகிறது. பேச்சுவார்த்தைக்கு நம் தரப்பு தயாராகின்ற போதிலும், இதைக் கையாளும் ஒருமித்த பொறிமுறை எம்மிடம் இல்லை. பேச்சுவார்த்தைகள் தோல்வி காண்பதற்கான காரணங்களை அனுபவப் பாடங்களாகக் கொண்டு அவற்றை தவிர்க்க அல்லது எதிர்கொள்ள சரியான பொறிமுறையை நாம் ஏற்படுத்துவதே எம் இனத்துக்கு நலன் பயக்கும்.

தமிழ்த் தேசியப் பரப்பில் செயலாற்றி வரும் அனைத்து கட்சிகளும் எமது அரசியல் தீர்வு சம்பந்தமான ஒருமித்த நிலைப்பாட்டை கொண்டுள்ளன. தீர்வின் இறுதி வடிவம், கட்டமைப்பு சமஷ்டி முறையில்தான் அமைய வேண்டும் என்பதை எல்லோரும் மாறாத நிலைப்பாடாகக் கொண்டுள்ளோம். அதே நேரம் அதற்கான விடயங்களைக் கையாள எமது அரசியல் தீர்வுக்கான நிலையான பொறிமுறையுடன் கூடிய கட்டமைப்பை நாம் உருவாக்க வேண்டும்.

சர்வதேச, பிராந்திய, தென்னிலங்கை, மற்றும் தமிழர் தரப்பில் ஏற்படும் அரசியல், பிரதிநிதித்துவ மாற்றங்களினால் இந்தப் பொறிமுறையின் செயற்பாடுகள் குழப்பம் அடைய மாட்டாது. மாறாக விட்ட இடத்தில் இருந்து பேச்சுவார்த்தைகளை தொடருவதற்கு வழி அமைக்கும்.

கடந்த காலங்களில், தெற்கிலுள்ள அரசாங்கங்கள் முன்மொழியும் அல்லது அழைக்கும் தற்காலிக கட்டமைப்புகளில் நாம் கலந்து கொள்வதாக அமைந்துள்ளதே தவிர எமது இனத்தின் உறுதியான அரசியல் தீர்வுக்கான ஒரு பொறிமுறையை நாம் கொண்டிராமல் இருப்பது துரதிஷ்டவசமானது. இதை நாங்கள் இப்பொழுது தீர்க்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. கூட்டமைப்புகள், கூட்டணிகள், கட்சிகள், கட்சி நிலைப்பாடுகள், கொள்கைகள், தேர்தல் நோக்கங்கள் என்பவற்றைத் தாண்டி இந்த பொறிமுறையை வகுத்து, உருவாக்கி, செயல்படுத்த அனைவரும் ஒன்றிணைந்து செயலாற்றுவது காலத்தின் தேவை.

எமது இனத்தின் அரசியல் தீர்வுக்கான பொறிமுறையை ஏற்படுத்தும் இந்த முயற்சிக்கு அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளினதும், தரப்புகளினதும் ஆதரவைக் கோரி நிற்கின்றோம். - என்று உள்ளது.

## 4 கூட்டமைப்பு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரையாடினர்.

கோவிந்தன் கருணாகரம் (ஜனா), சிவஞானம் ஸ்ரீதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், ராஜமாணிக்கம் சாணக்கியன் ஆகிய நால்வரே நேற்று அமெரிக்கத் தூதரோடு பேச்சு நடத்தினர்.

## மாகாண சபைகளுக்குப் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மாகாண சபைகளில் மாவட்ட அபிவிருத்திக் குழுக்களை ஸ்தாபிக்கத் தயார் என்று தெரிவித்தார்.

அதுதவிர மாகாண சபைகள் கலைப்பு தொடர்பில் ஜனாதிபதி எந்தக் கருத்தையும் வெளியிடவில்லை.

நிறைவேற்றுத் தீர்மானங்களை அமுல்படுத்துவதில் அரசு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு இடையில் சரியான ஒருங்கிணைப்பைப் பேணுவதற்கான களமாக மாவட்ட அபிவிருத்திக் குழுக்கள் செயற்படும் என்பதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நிலைப்பாடாகும்.

அதன் மூலம், வளர்ச்சிப் பணிகள் முறையாக நடைபெறுவதுடன், நிதி வீண் விரயம் மற்றும் தாமதங்கள் தவிர்க்கப்படும்" - என்றுள்ளது.

## மனித உரிமை மீறலில் ....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

வரவு-செலவுத்திட்டத்தின் பெருந்தோட்டத்துறை, கைத்தொழில் மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் -

2023 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் பெருந்தோட்டத்துறை அமைச்சுக்கு 10.7 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியைக் கொண்டு பெருந்தோட்ட மக்களின் நலன் சார்ந்த திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என எதிர்பார்க்கின்றோம். நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக காலம் காலமாக இருக்கும் பெருந்தோட்ட மக்களுக்கு இந்த வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக ஏதாவது நலன்புரித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

நாட்டுக்கு அந்நிய செலாவணியை காலம் காலமாக ஈட்டித் தரும் பெருந்தோட்ட மக்களுக்காக அனைவரும் ஒன்றிணைந்து குரல் கொடுக்கவேண்டும்.

வர்த்தகத்துறை அமைச்சுக்கு கடந்த ஆண்டு 1.5 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. இவ்வருடம் 5.6 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் ஏதேனும் புதிய அபிவித்தித் திட்டங்களை ஆரம்பிக்க அவதானம் செலுத்துங்கள். வாழைச்சேனை கடதாசி உற்பத்தி நிலையம், பரந்தன் கனியமணல் அகழ்வு தொழிற்துறை காணப்படுகின்றன.

பொறுப்பு வாய்ந்த தரப்பினர் இருக்கும் வளங்களை எவ்வாறு சூறையாடலாம் என அவதானம் செலுத்துகின்றார்களே தவிர, வளங்களைக் கொண்டு எவ்வாறு தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்துவது என்பது குறித்து அவதானம் செலுத்துவதில்லை.

மட்டக்களப்பு மற்றும் திருக்கோவில் பகுதிகளில் உள்ள இல்மனைட் வளம் சூறையாடப்படுவதைத் தொடர்ந்து எதிர்ப்போம்.

ஆகவே, இந்த பகுதிகளில் புதிய தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தும் திட்டங்களை அறிமுகப்படுத்தினால் அதனை முழுமையாக வரவேற்போம்.

இந்த அமைச்சுக்கு சுமார் 15 பில்லியன் அளவு நிதிதான் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் கடந்த காலங்களில் இடம்பெற்ற சீனி, தேங்காய் எண்ணெய் மற்றும் வெள்ளைப்பூண்டு மோசடியால் அரச வருமானம் பெருமளவில் இழக்கப்பட்டது.

இவ்வாறான மோசடிகளைக் குறிப்பிட்டுக் கொண்டு செல்லலாம். ஆனால், நாட்டுக்கு வருமானத்தை தேடிக் கொடுக்கும் பெருந்தோட்டத்துறை மற்றும் கைத்தொழில் துறை அமைச்சுக்கு 15 பில்லியன் ரூபாதான் ஒதுக்கப்பட்டுள்ளது.

அரச நிதியை மோசடி செய்து நாட்டை நெருக்கடிக்குள்ளாக்கியுள்ளவர்களுக்கு எதிராக எடுத்துள்ள நடவடிக்கை என்ன? மோசடி செய்யப்பட்ட நிதியை அரசுடமையாக்க ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

ஆனால், நாட்டை அபிவிருத்தி செய்யும் அமைச்சுகளுக்குச் சொற்ப நிதியே ஒதுக்கப்பட்டுள்ளது.

பிள்ளைகளின் ஆரோக்கியத்தைப் பாதுகாத்துக்கொள்வது பிரச்சினைக்குரியதாக உள்ளது. முட்டையின் விலை சடுதியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கு முட்டை ஒன்றை வாங்கிக் கொடுக்க முடியாத நிலைக்கு இந்த நாட்டு மக்கள் உள்ளாகியுள்ளார்கள்.

கைத்தொழில் அமைச்சு ஊடாக நாட்டின் கைத்தொழில்துறையை விரிவுபடுத்தும் நடவடிக்கையை அரசு முன்னெடுக்க வேண்டும்.

சீனா அம்பாந்தோட்டை துறைமுகத்தையும், கொழும்புத் துறைமுக நகரத்தையும் தனதாக்கியுள்ளது.

இந்த நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த சீனா எந்த அபிவிருத்தி முதலீடுகளை மேற்கொண்டுள்ளது? சீனாவின் முதலீடுகளில் இலங்கைக்கு எவ்வித நலனும் கிடைக்கப் பெறவில்லை.

சீனா இலங்கையின் நெருங்கிய நண்பன் என்று குறிப்பிடுகின்றார்கள். அவ்வாறாயின் கடன் மறுசீரமைப்பு விவகாரத்தில் இலங்கைக்கு சீனா ஆதரவாகச் செயற்பட வேண்டும்.

இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் மனித உரிமை பேரவையில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கும் போது சீனா இலங்கைக்கு ஆதரவாகச் செயற்படுகின்றது. இதனை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் சீனா இலங்கைக்குச் சார்பாகச் செயற்படுகிறது எனக் குறிப்பிடுகிறார்கள். இதனைப் பைத்தியக்காரத்தனமான பேச்சு என்று குறிப்பிட வேண்டும்.

சீனாவில் ஜனநாயகம், மனித உரிமைகள் இல்லை. மதச் சுதந்திரம் இல்லை. இவ்வாறான சூழலையா இலங்கையிலும் ஏற்படுத்த முயற்சிக்கின்றீர்கள்? சீனா இலங்கையின் உண்மையான நட்பு நாடு இல்லை. மஹிந்த ராஜபக்ஷவினதும், அவரது குடும்பத்தினரதுதும் நண்பராகவே சீனா உள்ளது - என்றார்.

## செம்மணி யாழ் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரும் ஆறாம் தேதி கார்த்திகை விளக்கீடு அன்று இந்த சிவலிங்கத்திற்கு குடமுழுக்கு இடம்பெற இருப்பதாகவும் தெரிகிறது.

அதற்கு முன்னர் இந்த சிவலிங்கத்துக்கான கூரை அமைப்பு இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

## யாழ். மேயரை நேற்று ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாநகர முதல்வர் வி.மணிவண்ணனை சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது யாழ் மாநகர ஆணையாளர் இ.த.ஜெயசீலனும் உடனிருந்தார்.

## யாழ். - சென்னை விமான ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'வடக்கு மாகாண சுற்றுலாப் பணியகத்தின் தலைவர் சுனில் திஸநாயக்கா' என்பவர் பெயரில் நேற்று ஓர் அறிவித்தல் வெளியானது.

2019ஆம் ஆண்டு திறக்கப்பட்ட யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் 2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் கொவிட் தொற்றுநோய் ஒட்டிய முடக்கம் காரணமாக இழுத்து மூடப்பட்டு இன்றுவரை செயலிழந்த நிலையிலேயே காணப்படுகின்றது..

யாழ்ப்பாணம் விமான நிலையம் இப்போது மீண்டும் டிசம்பர் 12 ஆம் திகதி திறக்கப்பட்டு சென்னைக்கான விமான சேவை ஆரம்பமாகவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த ஆரம்ப பணிகளிற்காக நேற்றைய தினம் மேற்படி வடக்கு மாகாண சுற்றுலாப் பணியகத்தின் இரு அதிகாரிகள் யாழ்ப்பாணம் விமான நிலையத்திற்கு வந்து பார்வையிட்டுச் சென்றுள்ளனர் என்றும் கூறப்பட்டுள்ளது.

இந்த விமான சேவைக்கான விமான சிட்டைகள் இன்று முதல் முற்பதிவு செய்யப்படவுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐயப்பன் கோவில் யாத்திரை, திருவெம்பாவைக் காலம் என்பதால் பக்தர்கள் இந்தச் சேவையைப் பயன்படுத்த முண்டியடிப்பர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## சர்வதேசத்தின் நீதி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சங்கத்தின் ஏற்பாட்டில் வவுனியா பழைய பஸ் நிலையத்திற்கு முன்பாக நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

'குடும்பங்களாக சரணடையும் போது அவர்களுடன் சேர்ந்து சரணடைந்த 29ற்கு மேற்பட்ட குழந்தைகள் எங்கே?', 'யுத்த காலத்தில் மரணித்த இராணுவ உடல்களை பொறுப்பெடுக்க மறுத்த சிங்கள அரசு அவர்களை காணாமல் ஆக்கப்பட்டோர் என அவர்களின் குடும்பத்தையும் ஏமாற்றுகின்றது' போன்ற பல்வேறு வாசகங்களைத் தாங்கிய பதாதைகளை

(12ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர் Kalaikkathir

## சர்வதேசத்தின் நீதி ....

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏந்தியவாறு போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டிருந்தனர்.

இந்தப் போராட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் உறவினர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## நல்லாட்சிக் கால .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அரசியல் விருப்புடன் பணியாற்றவில்லை என்பது அவர்களது இன்றைய ‘மாவட்ட அபிவிருத்தி சபைத் தீர்வு’ தொடர்பான கருத்தாடலிலிருந்து அம்பலமாகியுள்ளது.

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய ஈ.சரவணபவன் தெரிவித்துள்ளார்.

இனப் பிரச்சினைக்குத் தீர்வாக மாவட்ட அபிவிருத்திச் சபை முறைமையை முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான மைத்திரிபால சிறிசேன பிரேரித்திருந்தார். அந்த முறைமையை செயற்படுத்தத் தயார் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் வெளியிட்ட ஊடக அறிக்கையில் முன்னாள் எம்.பி. சரவணபவன் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நல்லாட்சி அரசின் காலத்தில் ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேனவும், பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவும் இணைந்து புதிய அரசமைப்பு முயற்சியை ஆரம்பித்திருந்தனர். இதன் ஆரம்ப அமர்வில் உரையாற்றிய மைத்திரிபால, சிங்கள மக்களுக்கு சமஷ்டி என்றால் பயம். வடக்கு மக்களுக்கு ஒற்றையாட்சி என்றால் பயம். நாம் இந்தச் சொல்லாடல்களை விடுத்து அனைவரும் ஏற்கும் புதிய அரசமைப்பை உருவாக்குவோம் என்றார்.

புதிய அரசமைப்பு சமஷ்டி முறையிலானதாக அமையாவிட்டாலும் ஓரளவு சிறந்த தீர்வை நோக்கி நகர்ந்தது. அது தமிழர்களுக்கு முழுமையான ஏற்புடையது என்று நான் சொல்லமாட்டேன். ஆனால், இப்போதுள்ள நிலைமைக்கு அது ஓரளவு முன்னேற்றகரமான விடயம்தான். அந்த முயற்சி ராஜபக்ஷக்களால் குழப்பியடிக்கப்படுவதாக அப்போதைய ஜனாதிபதி மைத்திரியும், பிரதமர் ரணிலும் பல தடவைகள் கூறியிருந்தனர்.

ஆனால், அவர்கள் இப்போது மாவட்ட சபையை தீர்வாகப் பரிசீலிப்பது தொடர்பில் பேசும்போது, புதிய அரசமைப்பு முயற்சியில் அரசியல் விருப்புடன் - முழு மனதுடன் அவர்கள் ஈடுபடவில்லை என்பது அம்பலமாகின்றது.

தமிழர் தரப்பு அடிப்படையிலேயே தூக்கிக் கடாசிய மாவட்ட சபை முறைமையை இப்போது தீர்வு தொடர்பில் பரிசீலிக்கத் தயார் என்று இந்தத் தலைவர்கள் கூறுவதானது இந்தியாவையும் கேவலப்படுத்துகின்ற ஒன்று.

மாவட்ட சபை முறைமை தீர்வாகாது என்பதால்தான் இந்தியாவின் தலையீட்டுடன் மாகாண சபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. அதைக் கூட தமிழர் தரப்பு தீர்வாக ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால், மாவட்ட சபையை விட மேம்பட்ட மாகாண சபை முறைமையை இன்னும் மேம்படுத்தி அடுத்த கட்டத்துக்கு - ஒற்றையாட்சியை விட்டு செல்வதை விடுத்து இன்னும் கீழிறங்கும் - பின்னோக்கிச் செல்லும் சிங்களவர்களின் செயற்பாட்டால் இந்த நாடு ஒருபோதும் உருப்படாது - என்றுள்ளது.

## இரு மகள்மாரையும் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில், சந்தேக நபரான தந்தையால் பல வருடங்காளல் இரு மகள்மாரும் 13 வயது மகனும் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபரால் 16 வயது மகள் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்படி, பொலிஸ் அதிகாரிகள் குழுவொன்று வீட்டுக்குச் சென்று பாதிக்கப்பட்ட மூவரிடமும் விசாரணை நடத்தியதில், சம்பவம் உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து தந்தை கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

## கிராம சேவகர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கரவெட்டி பிரதேச செயலத்துக்குட்பட்ட ஜே/369 கட்டைவேலி பகுதியில் கடமையாற்றும் புலோலி, உபயகதிர்காமத்தைச் சேர்ந்த பாலச்சந்திரன் லலித் (வயது 40) என்பவரே உயிரிழந்துள்ளார்.

நேற்று தமது அலுவலகத்துக்குக் கடமைக்குச் சென்று வீடு திரும்பிய பின்னர் திடீரென நெஞ்சு வலி ஏற்பட்ட நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

முதற்கட்ட விசாரணையில் மாரடைப்பு காரணமாக அவர் உயிரிழந்துள்ளார் என்று தெரியவந்துள்ளது.

கரவெட்டி பிரதேச செயலகத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்ட பின் வீடு திரும்பும் வழியில் நெஞ்சுவலி ஏற்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோது மரணமடைந்துள்ளார்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவர், அண்மையில் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சால் கிராம உத்தியோகத்தருக்கிடையில் நடைபெற்ற முகாமைத்துவப் போட்டியில் கரவெட்டி பிரதேச செயலக பிரிவில் முதலிடத்தைப் பெற்றவராவர்.







காலைக்கதிர் Kalaikkathir

# மனித உரிமை ஆணைக்குழுவுடன் மோதி நாட்டை முன் கொண்டுசெல்ல முடியாது!

## லக்ஷ்மன் கிரியெல்ல புத்திமதி



நாடு பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் ஐக்கிய நாடுகள் சபை, மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியவற்றுடன் மோதிக்கொண்டு நாட்டை கட்டியெழுப்ப முடியாது. அரசாங்கம் இதனைப் புரிந்துகொண்டு செயற்படவேண்டும்.

அத்துடன் மக்கள் ஆணை இல்லாத இந்த அரசாங்கத்துக்கு சர்வதேசம் உதவி செய்யப்போவதில்லை என எதிர்க்கட்சி பிரதமகொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத்திட்டத்தில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சு, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு மற்றும் வெகுசன ஊடக அமைச்சு விடயதானங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் குழு நிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

யுத்த இறுதிக்காலத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் அப்போதைய செயலாளர் பான்கீ மூன் இலங்கைக்கு வந்தார். அப்போது மஹிந்த ராஜபக்ஷ கண்டியில் இருந்தார். அதனால் பான்கீ மூன் கண்டிக்கு சென்று மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்துக் கலந்துரையாடி இருந்தார்.

இதன்போது அவர், யுத்தத்தின்போது மனித உரிமைகள் மீறப்பட்டிருக்கின்றன. சர்வதேச சட்டங்கள் மீறப்பட்டிருக்கின்றன. அதனால் இதுதொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் விசாரணை ஒன்று மேற்கொள்ள எதிர்பார்க்கின்றோம் – என்றார். அதற்கு மஹிந்த ராஜபக்ஷ, ஐக்கிய நாடுகள் சபை விசாரணை மேற்கொள்ளத்தேவையில்லை. நாங்கள் செய்வோம். – என்றார். ஆனால் அந்த வாக்குறுதியை அவருடைய காலத்தில் நிறைவேற்றவில்லை. பரணகம விசாரணை அறிக்கையை அனைவரும் ஏற்றுக்கொண்டார்கள். அந்தப் பரிந்துரைகள் எதனையும் நிறைவேற்றவில்லை.

அதேபோன்று 2013 மற்றும் 2014 ஆகிய இரண்டு வருடங்களும் உள்ளக விசாரணை மேற்கொள்ளுமாறு தெரிவித்து மனித உரிமை பேரவையில் எமக்கு எதிராகப் பிரேரணை கொண்டுவரப்பட்டது.

இந்தப் பிரேரணையை நிறைவேற்றத் தவறினால் 2015 இல் இலங்கைக்கு எதிராகப் பொருளாதார தடை விதிப்பதற்கு தீர்மானிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்தப் பொருளாதார தடையில் இருந்து தப்பித்துக்கொள்ளவே மஹிந்த ராஜபக்ஷ முன்கூட்டியே தேர்தலுக்கு சென்றார். அத்துடன் 2015 இல் நல்லாட்சி அரசாங்கம் ஐக்கிய நாடுகள் சபையுடன் நாங்கள் மோதிக்கொள்ள செல்லவில்லை. எமது அதிகாரத்தை நாங்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

அதனால்தான் நாங்களே மனித உரிமை ஆணைக்குழுக்கு சென்று, எமது நாட்டில் விசாரணை மேற்கொள்வதாக உறுதியளித்தோம். ஆனால் அன்று பொதுஜன பெரமுன அதற்கு எதிர்ப்பு தெரிவித்தது. இந்த முறை மனித உரிமை ஆணைக் குழுவில் சர்வதேச விசாரணை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. இந்த விடயங்கள் காலம் செல்லும்போது மறந்து விடும் என்றே அரசாங்கம் நினைத்துக் கொண்டிருக்கின்றது.

அவ்வாறு இடம்பெறுவதில்லை. இம்முறை சர்வதேச விசாரணைக்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கின்றது. அதனால் எமது நாடு தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் பாதிக்கப்பட்டிருக்கின்றது.

அத்துடன் எமது நாடு பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் ஐக்கிய நாடுகள் சபை, மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியவற்றுடன் மோதிக்கொண்டு நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. இதனை அரசாங்கம் புரிந்துகொள்வதில்லை.

இது மக்கள் ஆணை இல்லாத அரசாங்கம். இந்த அரசாங்கம் காலாவதியான பொருளைப் போன்றது. தொடர்ந்து இந்த அரசாங்கத்துக்கு முன்னுக்கு செல்ல முடியாது. அதனால் புதிய அரசாங்கம் ஒன்று அமைத்துக்கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும்.

அத்துடன் இந்த அரசாங்கம் தமிழ், முஸ்லிம் மக்களை பகைத்துக்கொண்டது. முஸ்லிம் மக்களை பாரியளவில் நோவினைப்படுத்தியிருந்தது. கொவிட் தொற்று பரவுவதாக அடிப்படையற்ற கருத்தொன்றை தெரிவித்துக்கொண்டு முஸ்லிம்களின் சடலங்களை எரித்தனர்.

முஸ்லிம் நாடுகளைப் பகைத்துக் கொண்டது. தற்போது முஸ்லிம் நாடுகளிடம் உதவி கேட்டுச்செல்கின்றனர். அரசாங்கம் வெட்கப்படவேண்டும். எனவே அரசாங்கம் எமது நாட்டை அழித்திருக்கின்றது.

அதனால் அரசாங்கம் தேர்தலுக்கு செல்லப் பயப்படுகின்றது. மகா வீரர் என சொல்லிக்கொண்டிருந்த தலைவர் ஒட்டுமொத்த நாட்டு மக்களையும் நடுத்தெருவில் விட்டு பின்கதவால் தப்பிச்சென்றார். எமது நாட்டின் எந்தத் தலைவரும் இவ்வாறு தப்பிச்சென்றவர்கள் அல்லர்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலைப் பிற்போடுவதற்கு பல்வேறு சூழ்ச்சிகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது. – என்றார்.

# அரச நிதி தொடர்பான முகாமைத்துவ சட்டத்தை இயற்றாமையால் நாடு வங்குரோத்தடைந்துள்ளது!

## அமைச்சர் பந்துல சுட்டிக்காட்டு



நிதி தொடர்பான முழுமையான அதிகாரம் நாடாளுமன்றத்துக்கு வழங்கப்பட்டுள்ள போதும் அது முழுமையற்றதாகக் காணப்படுகிறது.

பொருளாதாரப் பாதிப்பால் எமது வீடுகள் மாத்திரமே இறுதியில் தீக்கிரையாக்கப்பட்டன. அரச நிதி தொடர்பான முகாமைத்துவ சட்டத்தை இயற்றாததால் நாடு வங்குரோத்து நிலை அடைந்துள்ளது.

ஆகவே, இனியாவது இந்தச் சட்டத்தை இயற்றிக்கொள்ள அவதானம் செலுத்த வேண்டும் என ஊடகத்துறை மற்றும் போக்குவரத்து துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் வெளிநாட்டலுவல்கள், போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

சுதந்திரத்தின் பின்னரான காலப் பகுதியில் நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடியை தற்போது எதிர்கொண்டுள்ளது. 2001 ஆம் ஆண்டு 1.4 சதவீதத்தால் பொருளாதார வளர்ச்சி வீழ்ச்சியடைந்தது. அந்தக் காலப்பகுதியில் நாட்டின் அன்றாட தேவைக்கு கூட நிதியை திரட்டிக் கொள்ள முடியாத நிலை காணப்பட்டது.

தற்போதைய பொருளாதாரப் பாதிப்பு அனைத்து துறைகளுக்கும் தாக்கம் செலுத்தியுள்ளது. அரச மொத்த வருமானத்தில் பெரும்பாலான பங்கு அரச சேவையாளர்களுக்கு மாத சம்பளம் வழங்குவதற்கும் ஓய்வூதியம் மற்றும் நலன்புரி கொடுப்பனவுகளையும் வழங்க ஒதுக்கப்படுகிறது. நாட்டின் ஏனைய தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள வணிக அல்லது அரச முறை கடன்களைப் பெற வேண்டிய நிலை ஏற்பட்டது.

பொருளாதாரப் பாதிப்புக்கு நாடாளுமன்றம் பொறுப்புக் கூற வேண்டும் என்று குறிப்பிடுவதை ஏற்றுக் கொள்ள வேண்டும். நிதி சட்டத்தின் 148 ஆவது ஏற்பாடுகளுக்கு அமைய நிதி தொடர்பான அதிகாரம் நாடாளுமன்றத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும் அந்த அதிகாரம் முறையாக முழுமைப்படுத்தப்படவில்லை.

2003 ஆம் ஆண்டு அரச நிதி முகாமைத்துவ சட்டமூலம் நாடாளுமன்றத்துக்கு கொண்டு வரப்பட்டது. ஆனால் இதுவரை இந்தச் சட்டம் நிறைவேற்றப்படவில்லை. அரச செலவுகளைக் கட்டுப்படுத்தல், வரவு – செலவுத் திட்டத்தின் பற்றாக்குறையை நிலையான தன்மையில் பேணுவதையும் அரச நிதி தொடர்பான கொள்கை வகுப்பையும் அரச நிதி முகாமைத்துவ சட்டமூலம் அடிப்படையாகக் கொண்டிருந்தது.

நிதி தொடர்பான முறையான கொள்கைகளை நடைமுறைப்படுத்தாமல் இருந்ததாலேயே நாடு இன்று வங்குரோத்து நிலையடைந்துள்ளது என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆகவே இனியாவது அரச நிதி தொடர்பான முகாமைத்துவ சட்டத்தை நிறைவேற்ற அவதானம் செலுத்த வேண்டும். – என்றார்.

# அரசியல் மயமாகியுள்ள வெளிவிவகார அமைச்சை மறுசீரமைக்க வேண்டுமாம்!

## அநுர பிரியதர்ஷன யாப்பா கூறுகிறார்



அரசியலில் ஓய்வுபெற்றவர்களை வெளிநாட்டுத் தூதுவர்களாக அனுப்பும் நிலைக்கு வெளிவிவகார அமைச்சு அரசியல் மயமாகி இருக்கின்றது.

அதனால் வெளிவிவகார அமைச்சு முழுமையாக மறுசீரமைக்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சி உறுப்பினர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சு, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு மற்றும் வெகுசன ஊடக அமைச்சு விடயதானங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் குழு நிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

வெளிநாட்டுத் தூதுவர்கள் ஊடாகவே எமது நாட்டின் நிலைமை சர்வதேசத்துக்கு எடுத்துச்செல்லப்படுகின்றது. வெளிநாட்டு தூதுவர்கள் என்பது அந்த நாட்டின் கண்ணாடி போன்றவர்கள்.

அதனால் வெளிநாட்டு தூதுவர்களாக நியமிக்கப்படுபவர்கள் இராஜதந்திர அனுபவமுள்ள, மொழி ஆற்றல் உள்ளவர்கள் நியமிக்கப்படவேண்டும். கடந்த காலங்களில் அவ்வாறானவர்களே தூதுவர்களாக நியமிக்கப்பட்டிருந்தார்கள்.

ஆனால் தற்போது வெளிநாட்டுத் தூதுவர்கள் நியமனம் அரசியல் மயமாகி, அரசியலில் ஈடுபட்டவர்களின் உறவினர்களை ஓய்வெடுக்கும் ஒரு பதவியாக மாற்றப்பட்டிருக்கின்றது. இது பாரிய பிரச்சினையாகும்.

அத்துடன் வெளிநாட்டுத் தூதரகங்களில் உள்ளவர்கள், குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் வாய்ப்புக்களில் ஈடுபட்டுவரும் எமது சகோதரர்களின் நிலைமைகள் தொடர்பில் முறையாகக் கண்காணித்து நடவடிக்கை எடுத்திருந்தால், ஓமானில் இடம்பெற்ற சம்பவம் இடம்பெற இடமில்லை. எமது நாட்டு ஊழியர்கள் மாத்திரமே இவ்வாறான அசம்பாவிதங்களுக்கு ஆளாகி வருகின்றனர். அதனால் வெளிநாட்டு அமைச்சு முழுமையாக மறுசீரமைக்கப்படவேண்டும்.

மேலும் பிரான்ஸ்,ஜேர்மன், ரஷ்யா போன்ற நாடுகளுக்கு வெளிநாட்டு சேவைக்கு அனுப்புபவர்களுக்கு அந்த அந்த நாட்டுமொழி பயிற்சி வழங்கப்படவேண்டும். ஏனெனில் அந்த நாடுகளில் ஆங்கில மொழி பயன்படுத்துவதில்லை. அங்கு செல்பவர்களுக்கு அந்நாட்டு மொழி தெரிந்தால்தான் எமது நாடு தொடர்பாக அவர்களுக்கு எடுத்துச்சொல்ல முடியும்.

அத்துடன் வெளிநாட்டு சேவைக்கு அனுப்புவதற்கு நடத்தப்படும் போட்டிப் பரீட்சையில் மொழி தேர்ச்சி பார்க்கப்படுவதில்லை. அது பாரிய தவறாகும். மொழிதெரியாதவர்கள் பலர் வெளிநாட்டுத் தூதுவர்களாக அனுப்பப்படுகின்றார்கள். வெளிநாட்டுத் தூதுவர்களாக அனுப்பப்படுவர்களுக்கு மொழி ஆற்றல் இருப்பதுடன் திடகாத்திரமாக செயற்படக்கூடியவராக இருக்கவேண்டும். இந்தப் பண்புகள் இருந்தால்தான் வெளிநாட்டுத் தூதுவர் கடமையை சரியான முறையில் செய்யலாம். – என்றார்

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.12.2022இல் வெளியிடப்பெற்றது.